Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/790)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 27 செவ்வாய்க்கிழமை (12.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 286



தேசிய அணியில் வாகீசன் (06)



இதய சுத்தியுடன் பேச வாருங்கள் (08)




ரஷ்யாவில் கவுண்டது பணிகள் கப்பல் (13)



இலங்கையில் நீளமான பஸ் நிலையம் (15)

## தபால்மூல வாக்களிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)



யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களில் இன்று 155 வாக்களிப்பு நிலையங்களில் தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளதாக யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதற்கென 11 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட அவர் இதற்கான பாதுகாப்பு ஒழுங்குகள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்களிப்பு நிறைவுபெற்றதன் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.செயலகத்திலும், கிளிநொச்சி செயலகத்திலும் தபால்மூல வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாக இருப்பதாகவும், மாலை 6.30 மணிக்கு ஏனைய வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் வாக்களிப்பு நிலையங்களில் வேட்பாளர்கள் தமது இரண்டு முகவர்களை நியமிக்கலாம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (பா)

## துப்பாக்கிச் சூட்டில் கடற்படை வீரர் பலி


(திருகோணமலை)

திருகோணமலை, கடற்படை முகாமில் கடமையிலிருந்த கடற்படை வீரர் ஒருவர் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். கடமை நிமித்தம் குறித்த வீரரால் உபயோகப்படுத்தப்பட்ட துப்பாக்கி வெடித்ததிலேயே இவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இருப்பினும், இவரது மரணம் தற்கொலையா? அல்லது அவரது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மரணம் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று திருகோணமலை, துறைமுக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் திலங்க தர்ஷன (வயது-21) என்பவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றது.

# வடக்கில் இந்திய உதவித்திட்டம் கவனமுடன் கையாள வேண்டியுள்ளது

## இந்தியத் துணைத்தூதுவர் மகாலிங்கம்




(வவுனியா)

வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசினால் மேற்கொள்ளப்படும் உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்பாராத சிக்கல்களும், தாமதங்களும் தோன்றியுள்ளன. இதனால் நாம் இத்திட்டங்களை மிகவும் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது. எனினும், திட்டங்கள் யாவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்று துணைத் தூதுவர் எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்று திங்கட்கிழமை விஜயம் செய்த கொழும்பிலுள்ள இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் விக்கிரம் மிஸ்ரி மற்றும் யாழ். இந்திய அலுவலகத் துணைத்தூதுவர் எஸ்.மகாலிங்கம் ஆகியோர் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களுக்கு இந்திய மக்களினால் அனுப்பிவைக்கப்பட்ட கூரைத் தகடுகளையும், விவசாயத்திற்கு தேவையான உபகரணங்களையும் வழங்கி வைத்தனர்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சாள்ஸ் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

இந்த வைபவத்திற்கு முன்னர் மாவட்ட அரசாங்க அதிபருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் மீள்குடி யேற்றப்பட்ட மக்களுடைய விபரங்களையும் அவர்கள் பெற்றுக்கொண்டனர். இந்திய அரசாங்கத்தினால் வவுனியாவில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீட்டுத் திட்டங்கள் பற்றியும் இந்திய பிரதித் தூதுவர்கள் கேட்டறிந்து கொண்டனர். இதுவரையில் வழங்கப்பட்ட உதவிகள்

(15ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் வீதிப் புனரமைப்பு

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல வீதிகளின் புனரமைப்பு வேலைகள் நேற்றுக் காலை நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பூநகரி பிரதேச செயலர், பூநகரி பிரதேச சபையின் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், காலை 10

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் தேர்தல் வன்செயல் தொடர்பாக நாளை யாழ்.செயலகத்தில் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்தின் யாழ். அலுவலகத்திற்கு நேற்றுப் பிற்பகல் வரை எட்டு முறைப்பாடுகள் கிடைத் திருப்பதாக யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

வலிகாமம், சாவகச்சேரி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் இருந்தே இவ் எட்டு முறைப்பாடுகளும் கிடைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இம்முறைப்பாடுகளில் அதிகமானவை தமிழரசுக் கட்சியினரினாலேயே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவ்முறைப்பாடுகள் தொடர்பாக பொலிஸாருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டு, அவர்களின்

(15ஆம் பக்கம் பார்க்க)

## அக்கராயனில் புதிய வீட்டுத்திட்டம்

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி-அக்கராயனில் 100 வீடுகளை அமைத்துத் தருவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் அக்கராயன் சந்திப் பகுதியில்

(15ஆம் பக்கம் பார்க்க)

## காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு விசேட செயற்திட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிலவும் காணி பிரச்சினைக்களை தீர்த்து வைப்பதற்கான விசேட செயற்றிட்டமொன்றை ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் நிறை வேற்றுப்

(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தேர்தலைக் கண்காணிக்க 'பவ்ரல்' அமைப்பு தயாராகிறது

(யாழ்ப்பாணம்)

PAFFREL

எதிர்வரும் 23ஆம் திகதி யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் 'பவ்ரல்' மற்றும்

(15ஆம் பக்கம் பார்க்க)

# நீர்வாழ் உயிரின உற்பத்தி கிளிநொச்சியில் புதிய கட்டடம்




(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள நீர் வாழ் உயிரினச் செய்கைக்குரிய அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பபடது. கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன அவர்களும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களும் சம்பிரதாயபூர்வமாக அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் இக்கட்டடத் தொகுதி பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஏ9 வீதி கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்.



கொழும்புத்துறை சென்.யோசப் பாடசாலையின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பழைய மாணவர்களிடையே பல்துறைகளில் பிரகாசிப்போரை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. கொழும்புத்துறையைச் சேர்ந்த எஸ்.யேசுதாஸிற்கு வடமாகாண கலை விளையாட்டு பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனால் வளன் கோலைக் கலைச்சுடர் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதைக் காணலாம். (52)

## உல்லாசபுரியாகிறது கிழக்கின் பாசிக்குடா

(கொழும்பு)

வட - கிழக்கு மாகாணத்தில் பாசிக்குடா சுற்றுலாப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 10 உல்லாச ஹோட்டல்களை அடுத்தவருடம் ஜனவரி மாதம் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.


661 அறைகளைக் கொண்ட 10 ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கு 500 கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் பாசிக்குடா சுற்றுலா வலயத்தினுள் மேலும் 4 உல்லாச ஹோட்டல்களையும் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பாசிக்குடா சுற்றுலா வலயத்திற்கென 156 ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் 100 ஏக்கரில் 14 உல்லாச ஹோட்டல்களும் எஞ்சிய 56 ஏக்கரில் வாகன தரிப்பிடம் மலசல கூட வசதிகள் வர்த்தக நிலையங்கள் ஹெலிகெப்டர் இறங்குதளம் என்பனவும் அமைக்கப்படவுள்ளன.

இந்த உல்லாச ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டதும் பாசிக்குடா மற்றும் அயல் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்பினைப் பெற முடியும்.

# வீதிகள் புனரமைப்பு வன்னியில் தீவிரம்



(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி நகரத்திலிருந்து அக்கராயன் வரையான 19 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதி கிரவல் கொண்டு தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி நகரிலிருந்து கனகபுரம், புதுமுறிப்பு, கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன் வரையிலான 19 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்பட்டு வருவதுடன், புதுமுறிப்பு குளத்தின் கீழான முக்கிய பாலமும் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப்பகுதியிலுள்ள பல மதகுகளும் புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தின் 11 கிலோ மீற்றர் தூரம் வரையான வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இவ்வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகிறது. (121)

# விற்பனை முகாமையாளருக்கு பதக்கம் வழங்கிக் கௌரவம்



(யாழ்ப்பாணம்)

ஸ்லிம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சினமன் LAKE SICT ஹோட்டலில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற அகில இலங்கை 2011 இற்கான துறைசார் மகாநாட்டில் நிதியும் நிதி ஆலோசனையும் பிரிவின் சிறந்த முகாமையாளர் பிரிவில் தங்கப் பதக்கத்தை எச்.என்.பி அசூரன்சின் வடக்கு கிழக்கு முகாமையாளர் மாணிக்கவாசகம் புவிராஜ் பெற்றுக் கொண்டார்.

இவர் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பட்டதாரியும், மனிதவள முகாமைத்துவ பட்டதாரியும், யாழ். லயன்ஸ் கழகத்தின் தீவக வலய உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலுள்ள சகல வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் பிரதிநிதிகள், காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், கூட்டுத்தாபனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (52)

# கட்டாக்காலி மாடுகள் தொல்லை அதிகரிப்பு



(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடு கிராமத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பிரதேச மக்களினால் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கட்டாக்காலி மாடுகள் வீதியின் குறுக்கே பட்டி போட்டு நிற்பதால் வீதியால் பயணம் செய்யும் போது பெரும் இடையூறை ஏற்படுத்துகின்றனர். இரவு வேளைகளில் பிரயாணத்தை மேற்கொள்வோர் விழுந்து எழும்பும் அவல நிலையும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கட்டாக்காலி மாடுகள் வீதிகளையும் வர்த்தக நிலையங்களையும் அசுத்தப்படுத்துவதாகவும், வர்த்தகர்கள் காலை சென்று அவற்றை சுத்தப்படுத்த வேண்டியுள்ளதாகவும், இது தொடர்பாக மாடு வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்க்குமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (101)

# மண்ணித்தலை செபஸ்தியார் திருவிழா

(பூநகரி)

பிரசித்தி பெற்ற மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய பெருநாள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகி 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை பூநகரி பிரதேச பங்குத்தந்தை வ.பி.பிராயன் மேற்கொண்டுள்ளதுடன், இவ்வாலய திருவிழாவின் போது யாழ்ப்பாணம், குருநகர், பாஷையூர் ஆகிய பிரதேசங்களிலிருந்தே பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்மக்களுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் முகமாக இன்று பிற்பகல் 2.00 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பூநகரி பிரதேச சபை செயலர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர், பூநகரி வைத்திய அதிகாரி, இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (112)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

வெற்றுக்காணி பொறுப்பேற்றல் சம்பந்தமான அறிவித்தல்

ஆதன இல: 21, றக்கா ஒழுங்கை, வட்டாரம் 13.

யாழ்ப்பாணம், றக்கா ஒழுங்கை, வட்டாரம் 13 இல் அமைந்துள்ள மேற்படி ஆதனம் பராமரிப்பின்றி குப்பை கூழங்கள் கொட்டப்பட்டு சுகாதாரத்திற்கு கேடு விளைவித்தும், நுளம்புப் பெருக்கத்திற்கு ஏற்ற வகையிலும் இருப்பதனால், அயலவர்களின் கோரிக்கைக்கமைவாக இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடைச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

இவ்வாதனம் மீது எவராவது உரிமை கொண்டவராய் இருப்பின் 26.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறின் இவ்வாதனம் மாநகர சபையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு பரிபாலிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

2011.07.11


# தீவக போக்குவரத்து சேவை வழமைக்குத் திரும்புகின்றது



(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து பெரியளவிலான பஸ் வண்டிகள் தற்போது போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

முன்னர் இப்பகுதிக்கான சேவையில் சிறிய வாகனங்களே ஈடுபடுத்தப்பட்டு வந்தன. தற்போது பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து தனியார் போக்குவரத்தில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் பெரியளவிலான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர். இதனால் பயணிகள் சிரமமின்றி போக்குவரத்தை மேற்கொள்ள வசதி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

நாம் செய்யும் பணியில் வித்தியாசம் பாராட்ட வேண்டியதில்லை. எந்தப் பணியையும் கடமை உணர்ச்சியுடன் செய்யவேண்டிதன் முக்கியத்துவம் அதுவே இறைவனுக்கும் உகந்ததாகும்.

- சின்மயானந்தா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# குடிக்க நீர்; குந்த நிலம்

நீரின்றி அமையாது உலகு என்றார் வள்ளுவர். நாமோ சில காலம், போரின்றி அமையாது பொங்குதமிழ் என்று இருந்துவிட்டோம். இப்போதுதான் மெல்ல மெல்ல நாம் இழந்தவற்றை மீளப்பெறும் முயற்சியில் இறங்கியிருக்கிறோம்.

குடாநாட்டைப் பொறுத்தவரை குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக மாறிக்கொண்டிருக்கிறது. அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக தொழிற்சாலைகள் மற்றும் சனநெருக்கடி அதிகரிப்பதன் விளைவாக தண்ணீர்ப் பற்றாக்குறையும் மாசடைதலும் கூடவே பிரச்சினையாக உருவெடுக்கிறது. நீர் தண்ணீராக இருந்தால் மட்டும் போதாது, நன்னீராகவும் இருக்க வேண்டும்.

குறிப்பாக நெடுந்தீவு போன்ற தீவுப்பகுதிகளில் மக்கள் நன்னீராகக் குடிப்பதற்குப் பயன்படுத்தும் தண்ணீரை வாயில் வைத்துப் பார்த்தால் தெரியும். அங்குள்ள நல்ல தண்ணீர்க் கிணறுகளில் எடுத்து பவுசர்களில் விநியோகிக்கப்படும் குடிநீரே உப்புக் கரிப்போடுதான் இருக்கிறது. முன்பு தண்ணீர் நன்றாகவே இருந்ததாகவும், குழாய்க் கிணறுகள் தோண்டியபோது கடல் நீருக்கு மேலாக இருந்த பாறைத்தகடுகள் தகர்க்கப்பட்டு உப்புநீர் கலந்துவிட்டதாக அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள்.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளைப் பொறுத்தவரையிலும் கூட, குடி நீருக்குத் தகுதியான நீர்வளம் போதியளவு இல்லை என்பது நம் குறைபாடு. வரண்ட நம் பூமியில் இருக்கும் சிறிதளவு நன்னீரையும், நமது 'பாறை பிளந்து பயன் விளைவிக்கும்' கடுமுழைப்பு விவசாயிகள், 'பம்ப்'களினால் உறிஞ்சிப் பயிர்களுக்கு இறைத் திறைத்து வற்றச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த நீர்ப் பிரச்சினை முழு உலகுக்குமான பிரச்சினையாகப் போகிறது என்றே ஆய்வாளர்கள் எச்சரித்து வருகிறார்கள். உலகம் வெப்பமாவதன் வெளிப்பாடாக, காலம் மற்றும் அளவு மாறிவரும் பருவமழையின் வருங்காலத் தாக்கங்களும், நீரின் கொள்ளளவைக் குறைக்க வாய்ப்புள்ளது.

இப்பூவுலகின் பரப்பிலே படிந்துள்ள தண்ணீரின் மொத்த அளவில் 97.51 வீதம் கடல்நீர்தான். மீதமுள்ள 3 சதவீத நல்ல நீரில், 97 வீதம் வடதுருவ, தென்துருவப் பனிப்பாறைகளாகவும், 2 வீதம் நிலத்தடி நீராகவும் உள்ளது. மீதமுள்ள 1 வீதம் மட்டுமே குளம், குட்டைகள், ஏரிகள், ஆறுகள், அணைகள் அனைத்திலும் நிரம்பியுள்ள நீராகும். வருண பகவானின் கருணையால், மழை பொய்க்காமல் இருந்தால்தான் இக்குறைந்த அளவு நீரும் முழுமையாகக் கிடைக்கும்.

எனவேதான், தண்ணீர் திரவத் தங்கம் என்று வர்ணிக்கப்படுகிறது. பெருகிவரும் மக்கள் தொகையும், தொழிற்திட்டங்களும், அதிவேக நாகரிக வளர்ச்சியும் அன்றாட வாழ்வுக்கு அடிப்படை ஆதாரமாக உள்ள தண்ணீரை வேகமாக மாசுபடுத்தி வருகிறது.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் "மக்களுக்குத் தண்ணீர், வாழ்வுக்குத் தண்ணீர்" என்ற உலக நீர் நிர்வகிப்பு பற்றிய ஆய்வறிக்கை சில எச்சரிக்கைகளை விடுத்துள்ளது. கடந்த இருபதாம் நூற்றாண்டில், உலக சனத்தொகை மூன்று மடங்காக அதிகரித்தபோது, நீரின் பயன்பாடு ஆறு மடங்காக அதிகரித்துள்ளதாம். இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில், 60 நாடுகளில் உள்ள 700 கோடி மக்கள் நீர்ப்பற்றாக்குறையால் பாதிக்கப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஆசிய நதிகள் அசுத்தமானவையாகவும், நீரில் மூன்று மடங்கு அதிக அளவில் மனித மலத்தில் உள்ள பக்ரீறியா கலந்துள்ளது என்பதும், இருபது மடங்கு அதிக அளவு ஈயம் கரைந்துள்ளது என்ற விபரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளது.

எனவே, மக்களுக்கு குடிக்கத்தகுந்த குடிநீரை வழங்குவது மிக முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய திட்டங்களில் ஒன்றாக உள்ளது. குடாநாட்டுக்கு இரணைமடுக் குளத்திலிருந்து குடிநிர் கொண்டுவரும் பாரிய திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இது தண்ணீரினால் கண்ணீரைத் துடைத்திடும் கருணைச் செயல்.

அண்மையில் நெடுந்தீவுக்குச் சென்று, மக்கள் குறைகளைக் கேட்டறிந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தத் திட்டத்தின் மூலம் இரண்டு வருடத்திற்குள் குடாநாட்டின் குடிநீர்த் தேவை பூர்த்தியாகும் போது, அதற்கடுத்த வருடத்திற்குள்ளாக நெடுந்தீவுக்கும் அத்திட்டத்திலிருந்து குடீநீர் கிடைக்கும் என்று அந்த மக்களின் வயிற்றில் நீர் வார்த்து மகிழ்ச்சி பொங்கச் செய்தார்.

உலகில் இன்று, எங்கோ ஒரு கோடியில் இருக்கும் நாட்டிலிருந்து மறுகோடியில் இருக்கும் இன்னொரு நாட்டிற்கு, பல நாடுகளைக் கடந்து நிலத்திற்குக் கீழாக குழாய்களில் எரிபொருட்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். மின்சாரத்தை அனுப்புகிறார்கள். கடலுக்குக் கீழாக பல மைல்கள் தூரத்திற்குப் போக்குவரத்துச் சாலைகளையே அமைக்கிறார்கள். நாமும் நாட்டின் மத்தியிலுள்ள நீர்வளத்தை, அந்த ஆறுகளில் ஒன்றை வடக்கிற்குத் திருப்பிவிடுவது இன்று முடியாத காரியமல்ல.

– ஆசிரியர் –

# மனைப்பொருளாதாரத்தை வடக்குநோக்கி நகர்த்திய பெருமைக்குரியவர் அமைச்சர் டக்ளஸ்

## யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன்

(ஊர்காவற்துறை)

மனைப் பொருளாதாரத்தை வடக்கு நோக்கி நகர்த்திய பெருமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையே சாரும் என நெடுந்தீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் மனைப் பொருளாதார அறிமுக விழாவில் கலந்துகொண்டு மனைப் பொருளாதாரத் திட்டத்தின் நோக்கம், இலக்கு பற்றி கருத்துரை வழங்கிய யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன் தெரிவித்தார்.

இம் மனைப்பொருளாதார அபிவிருத்தித் திட்டம் இலங்கையின் சகல பாகங்களிலும் நடைமுறையில் உள்ளது. வடபகுதிக்குத் தாமதமாகவே இத்திட்டம் வந்துள்ளது.

மேற்படி திட்டத்தினை வடக்குப் பகுதிக்குக் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்து வடக்குப் பகுதிக்குக் கொண்டு வந்த பெருமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையே சாரும்.

யாழ். மாவட்டம் விவசாய அபிவிருத்தியில் பெயர் பெற்றது. ஆயினும், கடந்தகால யுத்தத்தால் நலிவுற்ற நிலையிலிருந்து எமது மக்களை மீட்க இம் மனைப் பொருளாதாரத் திட்டப் பணிகளை கிராம சேவையாளர்களும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் முன்னெடுத்துள்ளார்கள்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சுமார் 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு யாழ. மாவட்டத்தில் சுமார் 6000 பயனாளிகளை இத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (27)

# பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழா பவனி

(யாழ்.நிருபர்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தின் ஆடிவேல் விழா எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் வெகு சிறப்பாக நடை பெறவுள்ளது.

16 ஆம் திகதி சனிக்கிழமை பாலகதிர்காம தேவஸ்தானத்தில் இருந்து புறப்படும் ஆடிவேல் இரதம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம், வண்ணார்பண்ணை சிவன் கோயில், வணணை நாச்சிமார் அம்மன் கோயில், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயில், அரசடி சிவகாம சுந்தரி ஆலயம் என்பவற்றின் ஊடாக மூன்றுநாள் இரத பவனி வந்து 18 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

பக்தர்கள் பெருமளவில் ஆடிவேல் இரத பவனியில் கலந்துகொண்டு முருகப் பெருமானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(10)

# நாணயக் கண்காட்சி

(யாழ்.நிருபர்)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நாணயக் கண்காட்சி இடம்பெற்றது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் நடைபெற்ற இக் கண்காட்சியை காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எஸ். கங்காதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இலங்கையில் தற்போது புழக்கத்தில் உள்ள, புழக்கத்தில் இல்லாத சில்லறைத்தாள் நாணயங்களுடன் உலகின் பல்வேறு நாடுகளினது நாணயங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

காரைநகர் கோட்டத்திற்குட்பட்ட ஒன்பது பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் இக்கண்காட்சியைப் பார்வையிட்டுச் சென்றனர். (10)

# துணுக்காய் கல்வி வலயம் ஆகஸ்ட் முதல் மாங்குளத்தில்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை அடுத்த மாதம் தொடக்கம் மாங்குளத்தில் இயங்கவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார்.

மாங்குளத்திலிருந்த துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையின் நிரந்தர கட்டடத்தினை இராணுவத்தினர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்ததை அடுத்து, புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப் பணிகள் நிறைவடைந்ததும் அடுத்த மாதம் தொடக்கம் மாங்குளத்தில் இயங்கும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது இவ்வலுவலகம் மல்லாவி மத்திய கல்லூரிக்கு அருகில் இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (121)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏமாற்றத்தைத் தடுக்க ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் அதிகளவிலான பணத்தைப் பெற்றுக்கொண்டு வெளிநாடுகளில் வேலை பெற்றுத்தருவதாக கூறி பொதுமக்களை ஏமாற்றும் போலி முகவர்களையும் ஏனைய ஆசாமிகளையும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கும் வகையில் நாடுதழுவிய ரீதியில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு நிகழ்சிகளை நடாத்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் திட்டமிட்டுள்ளது.

பிரதேசங்களிலுள்ள பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலகங்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் சபைகள் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வு செயலமர்வுகளினூடாக சட்டபூர்வமான முறையில் வெளிநாடுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க வழியேற்படுத்துவதோடு ஏமாற்று பேர்வழிகளிடமிருந்து அப்பாவிப் பொது மக்களையும் காப்பாற்ற முடியுமென வெளிநாட்டு வேவைவாய்ப்புப் பணியக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு ஏற்கனவே கிடைத்துள்ள முறைப்பாடுகளைத் தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் பணம் பெற்று வெளிநாடுகளுக்கு வேலைக்காக அனுப்பாமல் ஏமாற்றி வருபவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை எதிர்காலத்தில் இவ்வாறு ஏமாற்றுபவர்கள் சம்பந்தமாக 0112864118 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு உடன் அறிவிக்குமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# வாழ்வாதார உதவி வழங்கல்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கணவனை இழந்த பெண்களை குடும்பத் தலைவராக் கொண்ட 35 குடும்பங்களுக்கு லீட்ஸ் நிறுவனத்தின உதவியுடன் 511 ஆவது பிரிகேட் படைப்பிரிவினரால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த நான்காம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் 12 குடும்பங்களுக்கு கறவைப் பசு வளர்ப்பிற்காக தலா 43 ஆயிரம் ரூபா பெறுமதியான கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த 12 குடும்பங்களுக்கும் 5 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா பெறுமதியான கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டன. ஆடு வளர்ப்பிற்காக 23 குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்புக் கொட்டகை அமைப்பதற்காக தகரம், சீமெந்து மற்றும் இதர பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் 3 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா இதற்கென வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில 511 ஆவது பிரிகேட்டின் அதிகாரி பிரிகேடியர் கீர்த்தி கொஸ்ரா லீட்ஸ் நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் கே.ஜனேந்திரன், திட்ட இணைப்பாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் வழங்கிவைத்தனர்.

## போக்குவரத்து வசதிகளின்றி சிரமம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ-9 வீதியில் கொக்காவில் சந்தியில் இருந்து மல்லாவி வரை செல்லும் பிரதான வீதியில் மக்களுக்கான பேருந்து சேவைகள் எவையும் இடம்பெறாததால் இப்பகுதியில் உள்ள கிராம மக்கள், மாணவர்கள் மற்றும் அரச பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வீதியில் உள்ள புத்துவெட்டுவான்குளம், மருதங்குளம், பழைய முறிகண்டி, ஐயன்கண்குளம் பகுதியைச் சேர்ந்தவர்களே நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வீதியூடாக இதுவரை போக்குவரத்துச் சேவையும் நடைபெறவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் இக்கிராமத்தில் வாழுகின்ற பாடசாலை மாணவர்கள், அரச உத்தி யோகத்தர்கள்,பொதுமக்கள், வியாபாரிகள் எனப் பலதரப்பினர் தமது தேவைகளை மிகக் கடினமான பாதை வழியாகச் சென்றே பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

## வெட்டுக்களிக்குள அணையை ஒரு அடி உயர்த்தத் திட்டம்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு வெட்டுக்களிக் குளத்தினை மேலும் ஒரு அடிக்கு அணைக் கட்டுக்களை உயர்த்துவதன் மூலம் மழை நீரை அதிகளவு சேமித்து அப்பகுதியின் நிலத்தடி நீரினை நன்னீர் மயமாக்குவதற்கான திட்டமிடல்கள் நடைபெற்று வருவதாக நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக்குளத்தினை உள்ளூர் தொழிலாளர்களைக் கொண்டு வேலைகளைச் செய்வதன் மூலம் உள்ளூர் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த 2003ஆம் ஆண்டு இக்குளம் புதிதாக பல மில்லியன் ரூபா செலவில் அணைகட்டப்பட்டதால் தற்போது கோடைக் காலத்தில் கணிசமான அளவு நீர் தேங்கி நிற்கின்றது. இதனை மேலும் ஒரு அடி விஷ்தரிப் பதன் மூலம் வருடம் முழுவதுமாக நீரினை தேங்கவைக்க முடிவதுடன் இதன் மூலம் அப்பிரதேசத்திலுள்ள நிலத்தடி நீர் நன்னீராக மாற்றமடைய வாய்ப்புகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (27)

## இரதோற்சவம்

(யாழ். நிருபர்)

புன்னாலைக்கட்டுவன் ஆயக் கடவை விநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை புதன் கிழமை காலை நடைபெறவுள்ளது. மறுநாள் 14ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (10)

# நாம் சொல்கின்ற வார்த்தைகள் தான் எதிர்காலத்தில் உயர்ச்சிக்கு வழிகாட்டும்



நீண்ட காலமாக புனரமைக்கப்படாது இருந்த யாழ். நகர் கிழக்கு சோமசுந்தரம் அவனியூ வீதியை திருத்துவதற்கென பறிக்கப்பட்ட கற்கள் வீதியின் நடுவே வந்துள்ளதால் இவ்வீதியூடாகப் பிரயாணம் செய்யும் மக்கள் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர். (படம் : சுமித்தி)

### வண. பிதா ரவிச்சந்திரன் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

நாம் சொல்லும் வார்த்தைகள் தான் எதிர்காலத்தில் நல்ல உயர்ச்சியையும் எழுச்சியையும் அடைய வழிகாட்டும் என வண பிதா. ரவிச்சந்திரன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற "இளைஞர்களுக்கான ஆன்மீக சிந்தனை" என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், சமய விழுமியங்களுக் கூடாக இளைஞர்கள் வளர்ந்து சாதிக்க வேண்டும் என்ற உறுதி இளமைப் பருவத்தில் தான் ஏற்படும். இளமைப் பருவம் ஆற்றல் மிக்கதாகவும், உற்சாகம் மிக்கதாகவும் அமையவேண்டும். இளமையைச் சிறப்பாக அனுபவிக்க வேண்டும்.

நாம் சொல்லும் வார்த்தைகள் தான் எதிர்காலத்தில் நல்ல எழுச்சியையும், உயர்ச்சியையும் அடைய வழிகாட்டும். இளமைப் பருவத்தில் செய்யும் நற்செயலகளை நினைத்து முதியவர்கள் ஆனதன் பின்பு பெருமை கொள்ள வேண்டும். இளைஞர்களாக இருக்கும்போது இளம் பருவத்தை மது, புகைத்தல், போதைப் பொருள், மாது, வன்முறைகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. ஆன்மீகச் சிந்தனையில் முழு மனதாக ஈடுபட்டு இளமைப் பருவத்தை சுவைக்க வேண்டும் என்றார். (எஸ்)

## விபத்தில் சாரதி படுகாயம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு - முறிகண்டி ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் வாகனச் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: மேற்படி வீதியால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பிக்கப் வாகனம் ஒன்று முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் ஏ-9 வீதியின் அருகிலுள்ள பாலை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி தடம்புரண்டபோதே வாகனச் சாரதி படுகாயமடைந்தார். வாகனத்திலிருந்த ஏனையோர் காயங்கள் எதுவுமின்றி தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பிலான விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (110)

## நயினாதீவு தேர் திருவிழாவுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய தேர் உற்சவத்தை முன்னிட்டு யாழ். நகரில் இருந்து விசேட போக்குவரத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனைவிட பக்தர்களின் வசதி கருதி குறிகாட்டுவான்துறையில் இருந்து நயினாதீவு இறங்குதுறைக்கு இடையில் மேலதிக படகுச் சேவைகளுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. வடபிராந்திய போக்குவரத்துச் சேவை நகரில் இருந்து விசேட பஸ் சேவைகளை நடத்தவுள்ளது என்றும் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களின் வசதி கருதி ஆலய சுற்றாடலில் சகல அத்தியாவசிய சேவைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. (வி)

## வரலக்ஷ்மி விரதம்

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரலக்ஷ்மி விரத உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் கலந்து கொள்ளும் மற்றும் வரலக்ஷமி விரத நூலினைப் பெற்றுக் கொள்ள விரும்பும் அடியார்கள் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆதீன மகா சபையில் தமது பதிவுகளை இன்றிலிருந்தே மேற் கொள்ளலாமென மேற்படி சபையினர் தெரிவித்துள்ளனர். (10)

## அரச ஒப்பந்தகாரர்கள் இல்லாமையால் நெடுந்தீவில் கட்டட வேலைகள் பாதிப்பு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பகுதியில் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான ஒபந்தகார்கள் இன்மையால் அரச ஒப்பந்த வேலைகளை மேற்கொள்வதில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பெரும் சிமரங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவுப் பகுதியில் இதுவரை காலமும் வீதி ஒப்பந்தங்கள், கட்டட ஒப்பந்தங்களை நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் மற்றும் அபிவிருத்தி அமைப்புக்கள் தனியார் ஊடாக மேற்கொள்ளப்பட்டபோதும், இந் நிறுவனங்கள் போதிய பண வலுவின்மையால் ஒப்பந்தங்கள் இழுத்தடிக்கப்பட்டு குறித்த காலத்தில் முடிக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கட்டட நிர்மாண வேலைகள், வீதி ஒப்பந்த வேலைகளுக்கான தொழிலாளிகளையும் பிற இடத்தில் இருந்தே கொண்டு செல்வதோடு போதிய வளப் பற்றாக்குறை, கட்டடப் பொருட்களை வெளியிடங்களில் இருந்து கொண்டு செல்ல வேண்டிய கஷ்ட நிலையுள்ளமையால் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு வெளியூர் ஒப்பந்தகார்கள் முன் வர மறுப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, இவ் ஒப்பந்தப் பணிகளைச் செய்வ தன் மூலம் உள்ளூர் நிறுவனங் கள் தங்களது இலாபங்களைப் பெருக்கிக் கொள்வதுடன் நெடுந் தீவுப் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முன்வரவேண்டும் என்பதே தற்போதைய எதிர் பார்ப்பாகவுள்ளது. (27)

## தீவக மாணவிக்கு காந்தி புலமைப் பரிசில்

(யாழ். நிருபர்)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவியான யமுனா அரியபுத்திரன் புலமைப்பரிசில் பெற்று இந்தியா சென்றுள்ளார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஒவ்வொரு கல்வி வலயத்தில் இருந்தும் தலா ஒவ்வொரு மாணவருக்கு மகாத்மா காந்தி புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

தீவகக் கல்வி வலயத்தில் இருந்து புலமைப் பரிசில் பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறு பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## சேவை மேம்பாட்டு கருத்தரங்கு

(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து இலங்கை வங்கிச் சேவையாளர்களுக்கும் சேவை மேம்பாட்டு இலக்கினை அடைதல் என்னும் பொருளிலான கருத்தரங்கு எதிர்வரும் 14, 16, 17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகத் தொழில் நிறுவனம் ஆகிய நிறுவனங்களில் ஆலோசகராகக் கடமையாற்றிய கலாநிதி க. குகதாசன் இக்கருத்தரங்குகளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளார்.

முதல் நாள் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல இலங்கை வங்கி முகாமையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளதுடன், இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ். மாவட்ட வங்கிகளின் மேல் நிலை அதிகாரிகளும் மூன்றாம் நாள் நிகழ்வில் வங்கியின் புதிய சேவையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## வவுனிக்குளத்தில் நோய்த் தாக்கம்; சிறுபோக நெற் பயிர்கள் பாதிப்பு

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற் பயிர்களில் நோய்த் தாக்கங்கள் அதிகரித்துக் காணப்படுகிறது.

பாண்டியன்குளம், செல்வபுரம் உள்ளிட்ட பிரதேசங்களின் இடதுகரைப் பகுதியில் சுமார் மூவாயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் இச்சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இப்பயிர்களில் மடிச்சுக்கட்டி, இலை உண்ணித் தாக்கங்கள் போன்ற நோய்கள் காணப்படுவதாகவும், இது தொடர்பாக தாம் விவசாய போதனாசிரியர்களிடம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (110)

# இரணைமடுக்குளத்தின் மீன்பிடி விருத்தி மீன்குஞ்சுகள் விடுகை; படகுகள் வழங்கல்





(கிளிநொச்சி)

நன்னீர் மீன்பிடியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இரணைமடுக்குளத்தில் இரண்டு இலட்சம் திலாப்பியா மீன்கள் விடும் நிகழ்வும் மீனவர்களுக்கு மீன்பிடிப்படகு வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது

இதில் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலை வருமான மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உரையாற்றுகையில், இரணைமடுவில் மீன் பிடிக்கான அனுமதி கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து, இப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடடைய ஆரம்பித்துள்ளது. நாளாந்தம் 4000 கிலோ மீன் பிடிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இதை மேலும் அதிகரிப்பதற்காகவே இரண்டு இலட்சம் மீன் குஞ்சுகளை இன்று குளத்தில் விட்டுள்ளோம். தொடர்ந்து மக்களின் ஏனைய தொழிற் துறைகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கை களை நாம் மேற்கொண்டுவருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சர், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இப்பகுதிமக்களை இரணைமடுக்குளத்தில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு நாடாளுமன்றத்தில் பலதடவைகள் கோரிக்கை விடுத்து வந்தார் அவரின் அயராத முயற்சியின் விளைவாக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்தே இங்கு தொழில் புரிவதற்கான அனுமதி வழங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

இரணைமடு, வன்னேரிக்குளம், புதுமுறிப்பு, கரியாலை நாகபடுவான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு 40 மீன்பிடிப்படகுகளும் மற்றும் வலைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி, அமைச்சின் செயலாளர் சாந்த பண்டார, ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் கணேசமூர்த்தி, நன்னீர் மீன்பிடிச் சங்க பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## சமூக பராமரிப்பு நிலையம் துணுக்காயில் திறந்து வைப்பு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் பிரதேசத்தில் சமூக பராமரிப்பு நிலையமொன்று கடந்த 6ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யுனிசெவ் நிறுவனத்தினால் 15 இலட்சம் ரூபா நிதியில் கட்டப்பட்ட இந்நிலையத்தை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. பத்திநாதன் வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரிகேடியர் திருநாவுக்கரசு, துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (121)

## விலங்கு வேளாண்மைத் துறையை ஊக்குவிக்க அரசு உதவவேண்டும்

### - கிளி. விவசாயிகள் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விலங்கு வேளாண்மை வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலப் போர் இடப்பெயர்வுகள் காரணமாக பெருமளவு கால்நடைகள் அழிவடைந்ததால் விலங்கு வேளாண்மைத்துறை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது இருக்கின்ற கால்நடைகளை பராமரிப்பதற்கு கூட சிறந்த மேய்ச்சல் தரவைகள் இல்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விலங்கு வேளாண்மைத்துறையை மேம்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு பெருமளவு நன்மைகள் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.எனவே விலங்கு, வேளாண்மைத் துறையை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தின் உதவி தேவைப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (121)

## மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு பொதுநோக்கு மண்டபங்கள் புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக் காய் பிரதேசத்திலுள்ள அம்பலப்பெருமாள் மற்றும் கோட்டைக்கட்டிய குளம் ஆகிய பகுதியிலுள்ள பொது நோக்கு மண்டபங்கள் தற்போது புனரமைக்கப்பட்டுவருகிறது.

இதில் கோட்டைகட்டியகுளம் பகுதி யில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தின் புனரமைப்பு பணிகள் நிறை வடைந்துள்ளதுடன், அம்பலப்பெருமாளிலுள்ள பொதுநோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்டு வருகிறது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் இவ்விரு பொதுநோக்கு மண்டபங்களின் புனரமைப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த கால போரினால் அழிவடைந்த கோட்டை கட்டியகுளம் சிவன் ஆலயம் தற்போது யு.என்.டி.பி. நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்டுவருகிறது. (121)

## சிறப்புற நடைபெற்ற வருடாந்தப் பொங்கல் விழா

(முரசுமோட்டை)

நட்டாங்கண்டல் முத்துமாரியம்மன் அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அன்றையதினம் பொங்கல் விழா ஆரம்பமாகி பண்டம் எடுத்தல் இடம்பெற்று முத்துமாரியம்மன் காத்தவராயன் ஆகிய தெய்வங்கள் வீதியுலாவும் இடம்பெற்றது. மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு பொங்கல் விழா நிறைவு பெற்றது. கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு பொங்கல் விழாவில் பல எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (110)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(12.07.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
ஆனி 27 ஆம் நாள்.
இராகுகாலம் 2.59–4.29, சுபநேரம் 10.29 –11.59,
நட்சத்திரம் அனுஷம் மு.ப. 10.48 வரை
திதி: துவாதசி பி.ப. 3.39 வரை
பிரதோஷ விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், கல்விப்பாராட்டு, தெய்வதரிசனம், விபத்து.

ரிஷபம:– பண வரவு, குடும்பத்தில் குதூகலம், தொழில் முடக்கம், வீண் அலைச்சல்.

மிதுனம் :– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி, பெரியோர் பாராட்டு.

கடகம்:– பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, நினைத்தது சாதித்தல், தேக ஆரோக்கியம்.

சிம்மம்:– வெளிநாட்டுதவி, சகோதர வெறுப்பு, குடும்பத்தில் சலனம், பண வரவு.

கன்னி :– தொழில் முடக்கம், இனசன அழைப்பு, கல்விப்பாராட்டு, தெய்வ தரிசனம்.

துலாம் :– உறவினர் வருகை பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி.

விருச்சிகம்:–பண வரவு, குடும்பத்தில் குதூகலம், தொழில் இலாபம், மூத்தோர் ஆசி.

தனுசு:– பணக் கஷ்டம், கடன் வாங்குதல், மனக்குறை, தான தர்மம்.

மகரம்:– எதிரியை வெல்லுதல், அதிகாரப்போட்டி, வெளியார் கவலை, தொழில் வெற்றி.

கும்பம் :– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி, தான தர்மசிந்தனை.

மீனம்:– பணக் கஷ்டம் மனக் கவலை, குடும்பத்தில் குழப்பம், தெரு விபத்து.

# ஆலயங்களின் யாகசாந்திப் பூசை மூலம் பல்வேறு நோய்கள் குணமடைகின்றன

### - வவுனியா மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு



(வவுனியா)

ஆலயங்களில் அந்தணர்களினால் யாகசாந்திகளின் போது வெளியேறும் புகையானது. பல நோய்களை நீக்குகின்றது. காற்றை சுத்தப்படுத்துகின்றது. இயற்கைக்கு உறுதுணையாகவுள்ளது என இப்போது விஞ்ஞானரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட மேல்நீதி மன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தெரிவித்தார்.

அமரர் திருமதி பாலாம்பிகை தேவராசா ஞாபகார்த்த மண்டப திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்:

கலைகள், சமய சொற்பொழிவுகள். ஆன்மீக சொற்பொழிவுகள், நடனம் மற்றும் இசைபோன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் கலாசார மண்டபங்களில் நடைபெற்று வருகின்றது. விநாயகர் ஆலயத்தில் இவ்வாறானதொரு மண்டபம் அமைக்கப்பட்டது பலருக்கும் பயனுள்ளது. சமய நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் சிறுவர்களை நல்லவழிப்படுத்த முடியும். மாணவர்கள் நல்ல அறிவுசார் நூல்களை வாசிக்கவும் சமய சொற்பொழிவுகளையும், கலை நிகழ்சிகளையும் கேட்கவும் பார்க்கவும் பெற்றோர்கள் அனுமதிக்கவேண்டும்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம்தான் வாழ்க்கையை உயர்த்தும் என்ற எண்ணத்துடன் வாழாது, பிள்ளைகளை கலை இலக்கியங்கள் முக்கியமாக கம்பராமாயணம். திருக்குறள் போன்ற அறிவுதரும் நூல்களை வாசித்து அதிலுள்ள அறக்கருத்துக்களை மனதில் கிரகித்துகொள்வது நன்று. விஞ்ஞான செயற்பாடுகள் இப்போது அழிவை நோக்கி செல்வதினை பார்க்கின்றோம். விஞ்ஞானம் மீது தான் மனிதன் சவாரி செய்யவேண்டும் மனிதன்மீது விஞ்ஞானம் சவாரி செய்ய அனுமதிக்ககூடாது என்றார். இவ் வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பி.சிவகுமாரன் மண்டப நினைவுக்கல்லைத்திறந்து வைத்தார். (39)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் காங்கேசன் துறைமுகம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைமுகத்தை நவீன வசதிகளைக் கொண்ட துறைமுகமாக புனரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தத் துறைமுகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


இந்த புனர்நிர்மாணத்திற்கு அரசாங்கம் பல மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

முதலில் துறைமுகப் பகுதியை துப்புரவு செய்வதற்கான ஆரம்ப கட்ட பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன

இந்தத் துறைமுகத்தை நவீன வசதிகளுடன் புனர்நிர்மாணம் செய்து வடக்கிற்கான கப்பல் சேவைகளை ஆரம்பிக்கவும் அரசு விரைந்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது. (வி)

# கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாமில் 300 வீரர்கள் கலந்து கொண்டனர்





(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் இளைஞர் விவகார அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி நிகழ்வில் 300 வரையானவர்கள் பயனடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை நெல்லியடி மகா வித்தியாலயத்திலும், ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் மகா வித்தியாலயத்திலும் நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலுமாக மூன்று நாட்கள் இப்பயிற்சி நிகழ்வுகள் நடைபெற்றன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் ரிலு பெரேரா அவர்களின் வழிகாட்டலில் நடைபெறும் இப்பயிற்சி நிகழ்வில், மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர். இந்நிகழ்வில் மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் என்.எம். முனைவ்வர், உதவிப் பணிப்பாளர் சமன் அபயவர்த்தன, யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஈஸ்வரராஜா ஆகியோர் பயிற்சி நிகழ்வை நெறிப்படுத்தினர்.

இப்பயிற்சி நெறியின் மூலம் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளை தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்ளத் தயார்படுத்துதல் நோக்கமாகவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (பா)

## விளையாட்டு செய்திகள்


## கிரீடா சக்தி நிகழ்வு

(கிளிநொச்சி)

4ஆவது கிரீடாசக்தி நிகழ்வு எதிர்வரும் 14ஆம் 15ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும். கிளிநொச்சி, பூநகரி, பளை, கண்டாவளை பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய விளையாட்டு வீரர்கள் இருபாலாரும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

கிரீடாசக்தி நிகழ்வில் 12 விளையாட்டுகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும் என வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர சி.அண்ணாத்துரை தெரிவித்தார். விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, மு.சந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்கள் எனவும் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

## தேசிய கூடைப்பந்து அணியில் யாழ்ப்பாண வீரர் வாகீசன்



(யாழ்ப்பாணம்)

தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு யாழ். வீரர் எஸ். வாகீசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சிரேஷ்ட தேசிய மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தியதுடன், மூன்றாமிடத்தை மாகாண அணி பெற்றுக் கொள்ளவும் இவர் துணை புரிந்தார்.

இதனைத் தொடர்ந்து தேசிய கூடைபபந்தாட்ட அணியில் இவருக்கு இடம் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆசிய அணிகளுக்கிடையில் இந்தியாவில் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள கூடைப்பந்தாட்த் தொடரில் விளையாடும் இலங்கை அணியின் 12 பேர் கொண்ட குழுவில் இவருக்கும் இடம்வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண் கூடைப்பந்தாட்ட வரலாற்றில் தேசிய அணியில் இவர் இடம் பிடித்தது ஒரு சாதனையாகக் கொள்ளப்படுகின்றது.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவனான இவர், ஜொலிஸ்ரார் அணியையும் பிரதிநிதித்துப்படுத்துகின்றார்.இவரின் பயணச் செலவிற்கு யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் உதவி புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி அணியை 229 ஓட்டங்களால் வீழ்த்தியது சென் ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

மகாஜானக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் 229 ஓட்டங்களால் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிக்கான போட்டியிலேயே சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி தெல்லிப்பளை மகாஜானக் கல்லூரி மைதானத்தில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கனாமிர்தனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கனாமிர்தன் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களையும், ஜெனதாப் 47, கபில்ராஜ் 43, சிந்துஜன் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சாரங்கன் மூன்று, கபிலன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி 32.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ரசிகரன் 33, லக்ஸ்மன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கனாமிர்தன் மூன்று, கனிசன், துவாரக சீலன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



கனாமிர்தன்

## கிளி. பெண்கள் திரேசா பாடசாலைக்கு விரைவில் உள்ளக விளையாட்டரங்கு

(நெல்லியடி)

நீச்சல் தடாகம், கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் உள்ளக விளையாட்டரங்கு உள்ளிட்டவற்றை கிளிநொச்சி பெண்கள் திரேசா பாடசாலைக்கு அமைத்துக்கொடுக்கவுள்ளவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பாடசாலைகளில் விஜயம் செய்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். கிளிநொச்சி திரேசா பெண்கள் கல்லூரியைப் பார்வையிட்ட அவர், மாணவர்கள், ஆசிரியர்களுடன் உரையாற்றினார். தேர்தல் நடவடிக்கைகள் நிறைவு பெற்றதும் இவ்வேலைத்திட்டங்கள் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (12)

## தேசிய ரீதியான போட்டித் தொடர் வடமாகாண அணியும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய ரீதியான எல்லே, பட்மின்ரன் மற்றும் மேசைப்பந்தாட்டப் போட்டிகளுக்கு வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அணிகளும் செல்லவுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி விஜயரூபசிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் 16, 17, 18ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும், இதில் இருபது பேர் கொண்ட பெண்கள் எல்லே அணியில் 16 வீராங்கனைகள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்வர்கள் என்றும், மேலும் நான்கு வீராங்கனைகள் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆண்கள் எல்லே அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் அனைவரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

எல்லே அணிக்கு கபடி பயிற்றுநர் ஜி. முகுந்தன், யாழ். விளையாட்டுத்துறையைச் சேர்ந்த ரி.ஆர். நித்திலநாயகமும், பட்மின்ரன் அணிக்கு ஊர்காவற்றுறை விளையாட்டு உத்தியோகத்தர் சதீஸ் கண்ணாவும், மேசைப்பந்தாட்ட அணிக்கு தெல்லிப்பளை விளையாட்டு உத்தியோகத்தர் வல்லவகுமாரன் ஆகியோரும் பொறுப்பாகச் செல்லவுள்ளனர். இந்த அணிகள் எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பு செல்லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(எஸ்)

## தென்மராட்சி பிரதேச செயலக கிரிக்கெட்; இரண்டாம் சுற்றில் வெற்றிபெற்ற அணிகள்

(மட்டுவில்)

மட்டுவில் கண்ணகி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் மேற்படி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் நாவற்குழி சித்திவிநாயகர் அணியை எதிர்த்து பாரதி அணி மோதியது. இதில் நாவற்குழி விநாயகர் அணி வெற்றி பெற்றது.

வில்சன் அணிக்கும் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் வில்சன் அணி வெற்றி பெற்றது.

ஞானதீபன் அணிக்கும் சீமான் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சீமான் அணி வெற்றிபெற்றது.

மேலும் கைதடி அணிக்கும் அம்பிகா அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் கைதடி குமரன் அணி வெற்றிபெற்றது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி யில் காலை 8 மணிக்கு சதீஸ் அணியும் மட்டுவில் வளர்மதி அணியும் மோதியது.

இதில் மட்டுவில் வளர்மதி அணி வெற்றிபெற்றது.

காலை 10.00 மணிக்கு மோகனதாஸ் அணியும் சிவன் அணியும் மோதின. இதில் சிவன் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து 2.00 மணிக்கு நடைபெற்ற போட்டியில் விண்டோஸ் அணியும் கைதடி வளர்மதி அணியும் மோதின. இதில் வளர்மதி அணி வெற்றிபெற்றது.

பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்ற போட்டியில் நியூபவர் அணியும் கைதடி குமரநகர் அணியும் மோதின. இதில் நியூபவர் அணி வெற்றிபெற்றது.

இதன் இறுதிப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கைதடி குமரன் அணியும், பாரதி அணியும் மோதவுள்ளன. (118)



மேற்குவங்காளத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின்போது இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி மற்றும் கௌதம் கம்பீர் ஆகியோர் கலந்துரையாடுவதைக் காணலாம்.

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடர் குறித்து கங்குலி பல அறிவுரைகளை கம் பீருக்கு கூறியுள்ளதுடன், தொடரை வெல்வதற் கான சில ஆலோசனைகளையும் இச்சந்திப்பின் போது வழங்கினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சமனிலையில் நிறைவடைந்த மூன்றாவது டெஸ்ட் போட்டி

## தொடரை வென்றது இந்தியா

(டொமினிகா)

இந்திய - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் நிறைவடைந்தது. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரை இந்திய அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

டொமினிகா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இந்திய அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.



முதல் இனிங்சிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிராவோ 50 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இசாந் சர்மா ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டோனி 77 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் எட்வேட்ஸ் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 143 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 322 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் சந்தர்போல் 116, எட்வேட்ஸ் 110 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 179 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி, போட்டியின் ஆட்ட நேர நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் முரளி விஜய் 45, ராவிட் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராம்போல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகான சந்தர்போலும், தொடர் நாயகனாக இசாந்த் சர்மாவும் தெரிவானார்கள்.

### சேவாக் கைகொடுப்பார்

இங்கிலாந்துடனான போட்டியின் போது நெருக்கடி இல்லாமல் ஓட்டங்கள் சேர்க்க அதிரடி வீரர் சேவாக் கைகொடுத்தார் என இந்திய வீரர் கம்பீர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தொடருக்கும் முன் கடுமையாக பயிற்சி மேற்கொள்வது போல, இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கும் தயார் செய்து வருகிறேன். இத்தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# மகளிர் உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத்தொடர் முதன் முறையாக அரையிறுதியில் ஆசிய அணி

(லிவர்குசன்)

பெண்களுக்கான உலகக் கோப்பை கால்பந்து தொடரின் காலிறுதியில், ஜப்பான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தியது. இதன்மூலம் உலக கோப்பைத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிய முதலாவது ஆசிய அணி என்ற வரலாறு படைத்தது. இரு அணி வீராங்கனைகளும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், ஆட்டத்தின் கடைசி நிமிடம் வரை எந்த ஒரு அணியாலும் ஒரு கோல் கூட அடிக்கமுடியவில்லை. பின் இரு அணியினருக்கு கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் எழுச்சி கண்ட ஜப்பான் அணிக்கு, ஆட்டத்தின் 108ஆவது நிமிடத்தில் கரினா மருயமா, ஒரு கோல் அடிக்க, 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் ஜப்பான் அணி, உலக கோப்பை கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிய முதலாவது ஆசிய அணி என்ற புதிய வரலாறு படைத்தது. தவிர, ஜேர்மனி அணியின் ஹாட்ரிக் சம்பியன் பட்டம் கனவு தகர்ந்தது. கடந்த 2003, 2007இல் ஜேர்மனி அணி, கோப்பை வென்றது.

மற்றொரு காலிறுதியில் பிரான்ஸ், இங்கிலாந்து அணிகள் மோதின. இதன் முதல் பாதி முடிவில் இரு அணியினராலும் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. பின், இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட இங்கிலாந்து அணிக்கு, ஆட்டத்தின் 59ஆவது நிமிடத்தில் ஜில் ஸ்காட் ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு பிரான்ஸ் வீராங்கனை எலிசி புசாகிலா, ஆட்டத்தின் 88ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். இதனால் ஆட்டநேர முடிவில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தது.

பின், இரு அணியினருக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் எந்த ஒரு அணியினராலும் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இதனால் போட்டியின் முடிவு தண்டஉதை மூலம் வெற்றி - தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அபாரமாக செயற்பட்ட பிரான்ஸ் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் பிரான்ஸ் அணி முதன் முறையாகக் உலக கோப்பை அரையிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்தது.

மூன்றாவது காலிறுதியில் அவுஸ்ரேலியா, சுவீடன் அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சுவீடன் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது முறையாக (2003, 2011) அரையிறுதிக்கு முன்னேறியது.

# ஆசிய தடகள சம்பியன் போட்டி; முதலிடத்தைப் பிடித்தது ஜப்பான்

(கோபோ)

ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டியில் ஜப்பான் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டி ஜப்பானில் உள்ள கோபோ நகரில் 4 நாட்கள் நடந்தது. 40 நாடுகள் கலந்து கொண்ட இந்தப் போட்டியில் சுமார் 600 வீரர்-வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியின் கடைசி நாளான நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான 3 ஆயிரம் மீற்றர் ஸ்டீபிள் சேஸ் பந்தயத்தில் இந்திய வீராங்கனை சுதாசிங் 10:10.77 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கம் வென்றார். இவர் ஆசிய விளையாட்டு போட்டியிலும் பதக்கம் வென்று இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 38 வயதான ஜப்பான் வீராங்கனை மினோரி ஹயாகரி 9:52.42 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து புதிய போட்டி சாதனையுடன் தங்கப் பதக்கத்தை தனதாக்கினார்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் இந்திய வீராங்கனை, வியட்நாம் வீராங்கனை தான்க் ஹங் துங் 2:01.41 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கமும், கஜகஸ்தான் வீராங்கனை மார்கரிடா மாட் கோ 2:02.46 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து வெள்ளிப்பதக்கமும் வென்றனர். டின் டு

லூக்கா ஆசிய விளையாட்டு போட்டியிலும் பதக்கம் வென்று இருந்தார். ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் இந்திய வீரர் ஹாமந்தா ராம் 1:46.36 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து முதல்முறையாக வெண்கலப்பதக்கம் வென்றார். குவைத் வீரர் முகமது முத்லாக் அல் அசிம் 1:46.15 வினாடியில் கடந்து தங்கப்பதக்கமும், கடந்த முறை சம்பியனான ஈரான் வீரர் சாஜத் மொராடி 1:46.35 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும் பெற்றனர். முத்லாக் அல் 1500 மீற்றர் ஓட்டத்திலும் தங்கப்பதக்கம் வென்று இருந்தார்.

நீளம் தாண்டுதலில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை மக்கா ஜானி நடந்த டிரிபிள் ஜம்ப் போட்டியில் 14.11 மீற்றர் தூரம் தாண்டி வெண்கலப்பதக்கம் பெற்றதுடன் அடுத்த ஆண்டு லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டி மற்றும் உலக போட்டிக்கு தகுதி பெற்றார்.

இந்த போட்டியில் ஜப்பான் 11 தங்கம், 10 வெள்ளி, 11 வெண்கலப்பதக்கத்துடன் பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்தது. சீனா (10 தங்கம், 12 வெள்ளி, 5 வெள்ளி) 2ஆவது இடமும், பக்ரைன் (5 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம்) 3ஆவது இடமும் பிடித்தன. ஒரு தங்கம், 2 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கம் பெற்ற இந்திய அணி 8ஆவது இடம் பெற்றது.



# சச்சினை சந்திக்க விருப்பமாம் சொல்கிறார் ஹரி பொட்டர் நாயகன்

(லண்டன்)

கிரிக்கெட் அரங்கில் சச்சின் உண்மையிலேயே ஒரு ஜாம்பவான். நான் அவரது தீவிர ரசிகன். அவரைச் சந்தித்து ஆட்டோகிராப் வாங்க காத்திருக்கிறேன் என, பிரபல ஹரி பொட்டர் படத்தின் நாயகன் டானியல் ராட்கிளிப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த இளம் ஹாலிவுட் நடிகர் ராட் கிளிப். இவர் நடித்து வெளியான ஹாரி பாட்டர் படம் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கிரிக்கெட் பிரியரான இவர், இந்திய அணியின் சச்சினை சந்திக்க ஆசைப்படுகிறார்.

இந்தியாவைப் பற்றி நிறைய விடயங்கள் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்குள்ள மக்கள் என்னைப் போலவே கிரிக்கெட் மோகம் கொண்டவர்கள் என்பது தெரியும். சமீபத்தில் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் போது இந்தியா வரத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், இசை ஆல்பத்தில் மிகவும் பிசியாக இருந்ததால் எனது பயணம் தள்ளிப் போனது. மிக விரைவில் இந்தியா செல்ல உள்ளேன். கிரிக்கெட்டில் சச்சின் உண்மையிலேயே ஒரு ஜாம்பவான். நான் அவரது தீவிர ரசிகன். விரைவில் அவரைச் சந்தித்து ஆட்டோகிராப் வாங்க உள்ளேன். அந்த த்ரில் அனுபவத்துக்காக நானும எனது நண்பர்களும் காத்திருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# இத்தாலி கால்பந்து அணித் தலைவர் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு

(ரோம்)

2006 உலகக் கிண்ண கால்பந்து சம்பியனான இத்தாலி அணியின் தலைவர் பெபியோ கனவாரோ கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார்.

முழங்கால் மூட்டுக் காயம் அதிகரித்ததைத் தொடர்ந்தே அவர் ஓய்வு அறிவிப்பை வெளியிட்டார். சிறிதாக ஓடினால் கூட நான் வலியை உணர்கிறேன் இந்த நிலையில் என்னால் தொடர்ந்தும் ஆட முடியாது என கனவாரோ குறிப்பிட்டார்.

38 வயதான கனவாரோ இத்தாலிக்காக 136 போட்டிகளில் விளையாடியுள்ளார். இதன் மூலம் இத்தாலிக்காக அதிக சர்வதேச போட்டிகளில் விளையாடியவர் என்ற சாதனையும் கனவாரோ வசமே உள்ளது.

அத்துடன் நான்கு உலகக் கிண்ண போட்டிகளில் விளையாடி யுள்ள கனவாரோ, ஆண்டின் சிறந்த கால்பந்து வீரராக தெரி வான ஒரே பின்கள வீரர் என்ற பெருமையையும் பெற்றுள ளார்.

கடைசியாக அவர் டுபாயின் அல் அஹிவி கழகத்திற்காக விளையாடியுள்ளார். தான் ஓய்வுபெற்றபோதும் மேலும் மூன்று மாதங்களுக்கு அஹ்லி கழகத்திற்கு ஆலோசகராக செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

# தமிழ் மக்களில் அக்கறை கொண்ட கட்சிகள் இதயசுத்தியுடன் பேச்சைத் தொடர வேண்டும்

## - அமைச்சர் குணசேகர கூறுகிறார்



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இதுவரை காலமும் இருதரப் பினரிடையே மட்டும் பேச்சுவார்த்தை கள் இடம்பெற்றுள்ளன. அதனால்தான் மூன்றாம் தரப்பு, நான்காம் தரப்பு எனக் கிளம்பியவர்கள் அப்பேச்சுவார்த்தை யைக் குழப்பியடிக்கும் முயற்சிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஆனால் இன்றைய அரசாங்கம் அமைக் கவுள்ள தெரிவுக்குழுவானது சகல கட்சி களையும் உள்ளடக்குவதனால் இங்கு மூன்றாம், நான்காம் தரப்பிற்கு இடமிருக் காது. சகல தரப்பினரும் ஒரே மேசையி லிருந்து தமது பிரச்சினைகளை முன் வைத்துப் பொதுவானதொரு தீர்விற்கு வரலாம். தேவைகள், குறைபாடுகள் காணப்படின் சகலரும் கூடியிருக்கும் பொது மேசையிலேயே சுட்டிக்காட்டி தீர் வினையும் கண்டுவிடலாம். வெளியே சென்று ஊடகங்களுக்கு அறிக்கை விட வேண்டிய தேவையேற்படாது என்று சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரி வித்துள்ளார்.

எல்லாக் கட்சிகளுக்கும் ஒவ்வொரு, கொள்கைகள் உள்ளன. ஆனால் அதி லிருந்து நகர்ந்து, விட்டுக்கொடுப்புடன் செயற்பட முன்வரும் போதே பிரச்சினை களுக்கு இலகுவாக தீர்வினைக்காண முடியும்.

தெரிவுக்குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு எடுக்கும் முடிவைத்தான் ஏற்று, நாடாளுமன்றத்திலும் சமர்ப்பித்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ உறுதியாக உள்ளார். இந்த அரிய சந்தர்ப்பத்தினை மக்களுக்காகப் போராடும் சகல கட்சி களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முன்னைய ஜனாதிபதிகள் சகலரும் சர் வகட்சிக் குழு, தெரிவுக்குழு என்பவற்றை நியமித்திருந்தாலும், இத்தகையதொரு கருத்தை அவர்கள் ஒருபோதும் வெளிப் படையாகத் தெரிவித்தது கிடையாது.

முன்னாள் ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா, சந்திரிகா ஆகியோருடனும் இணைந்து செயற்பட்ட வன் என்ற வகையில் இன்றைய ஜனா திபதியின் உறுதியான செயற்பாடுகள் பலமான நம்பிக்கை தருவதாக அமைந் துள்ளது.

இன்றைய அரசிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. ஜனாதிபதி நினைத்தால் எதனையும் தன்னிச்சை யாகச் செய்து இதுதான் தீர்வு எனத் திணிக்கவும் முடியும். ஆனால் அவர் அப் படி எதனையும் செய்யவில்லை, செய் யவும் மாட்டார். எனவே தமிழ்க் கட்சிகள் தமது மக்களில் உண்மையான அக்கறை கொண்டிருந்தால் இதய சுத்தியுடன் தமது பேச்சுக்களைத் தொடரவேண்டும் எனவும் அமைச்சர் டியூ தெரிவித்தார்.

## கடனட்டை மூலம் நிதிமோசடி செய்த இலங்கையருக்கு இங்கிலாந்தில் சிறை

(லண்டன்)

கடனட்டையைப் பயன்படுத்தி பாரி யளவிலான நிதி மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவர் இங்கிலாந்து நீதி மன்றத்தினால் சிறைவைக்கப்பட்டுள் ளார்.

முருகையா செல்வகுமார் என்ற குறித்த நபர் வெஸ்லி பகுதியில் அமைந துள்ள எரிபொருள் நிலையத்தில் பணி யாற்றியுள்ளதாக சர்வதேச தகவல் குறிப்பிடுகின்றன.

குறித்த நபர் கடனட்டை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் இயந் திரத்தை, தொழிநுட்ப உபகரண மொன்றை பொருத்தி எரிபொருள் பெற்றுக்கொள் வதற்கு வருவோரின் வங்கிக் கணக்கு விபரங்களை திருடியுள்ளார்.

இந்த விபரங்களூடாக வங்கியில் கணக்கு வைத்துள்ளவர்களின் பணத்தை கொள்ளையிட்டுள்ளதாக சந்தேக நப ருக்கு எதிரா குற்றஞ் சுமத்தப்பட்டுள் ளது.

குறித்த நபரினால் கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் 517 கடனட்டைகளூடாக சுமார் 41 ஆயி ரத்து 500 ஸ்ரேலிங் பவுண் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது

# சட்டவிரோதமான ஆயுதங்கள் கிழக்கில் ஒப்படைக்கப்படவில்லை

## - பொலிஸார் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத ஆயுதங்கள் இன்னமும் ஒப்படைக்கப்பட வில்லை என பொலிஸார் அறிவித்துள்ள னர். கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத மான முறையில் ஆயுதங்களைப் பயன் படுத்துவோர் உடனடியாக ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டு ஒரு வார காலம் கடந்துள்ள போதிலும், இது வரையில் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட வில்லை என பொலிஸார் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

ஆயுதங்களை ஒப்படைக்க வருவோர் பழைய குற்றச் செயல்களுக்காக தண்டிக் கப்படுவர் என்ற அச்சம் காரணமாக, பலர் ஆயுதங்களை ஒப்படைக்க அஞ்சு வதாகவும், ஆனாலும், ஆயுதங்களை ஒப்படைக்கச் செல்லும் நபர்களை கைது செய்யும் உத்தேசம் கிடையாது என பொலி ஸாரும், இராணுவத்தினரும் அறிவித் துள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்களைப் பயன் படுத்தி பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப் படுகிறது.

உரிய நேரத்தில் ஆயுதங்களை ஒப் படைக்கத் தவறும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

# சாதாரணதர மாணவர்களுக்கு கருத்தரங்கு நடத்துவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெற வுள்ள க.பொ.த. சாதாரணதர பரீட்சைக் குத் தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சை ஆணையாளர் திணைக்களம் நாடுபூராக வும் 2000 கருத்தரங்குகளை நடத்தவுள் ளது.

வரும் ஐந்து மாத காலப் பகுதிக்குள் இக்கருத்தரங்குகள் வடக்கு கிழக்கு உட் பட நாடு பூராகவும் உள்ள அரச பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படவிருக்கின் றது.

க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குரிய ஆறு முக்கிய பாடங்களிலேயே இக்கருத் தரங்குகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் கள் மூலம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கின் மூலம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் திறமைகளை அவர்கள் வெளிப்படுத்தி சிறந்த பெறு பேறுகளைப் பெற முடியும். இதற்கான வழிகாட்டலாகவே கருத்தரங்குகள் அமை யவுள்ளன.

# வடக்கில் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்த இராணுவம் பயன்படுத்தப்படுகிறது

## - குற்றஞ் சாட்டுகிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சி வேட்பாளர்களை அச்ச மூட்டுவதற்கு சக்திவாய்ந்த சில அரசியல்கட்சிகள் பாது காப்புப் படையினரைப் பயன் படுத்துவதாக ஜே.வி.பி. குற் றம் சுமத்தியுள்ளது.

கிளிநொச்சி-தருமபுரம் பகு தியில் தமது ஆதரவாளர்கள் பிரசாரம் செய்வதை இக் கட்சிகள் பாதுகாப்புப் படை யினரைப் பயன்படுத்தி தடுத் ததாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன் றில் தெரிவித்தார்.

தமிழத் தேசியக் கூட்ட மைப்பு வேட்பாளர் ஒருவரின் நாயொன்று கொல்லப்பட்டு, அதன் தலை குறித்த வேட் பாளரின் வீட்டு கேற்றில் தொங்கவிடப்பட்டிருந்தது எனவும் விஜித ஹேரத் கூறினார்.

வடக்கைச் சேர்ந்த பெண்களிடம் அரச சார்பு கருத்துக்களை வெளியிடச் செய்வதற்கு மேற்கொள் ளப்பட்ட முயற்சியொன்று தோல்வியில் முடிவடைந் தது எனவும் அவர் தெரிவித்தார்.

அரச தொலைக் காட்சியொன்றில் அப்பெண்கள் செவ்வி காணப்பட்டபோது, தாம் எதிர்கொள்ளும் சமூக பொருளாதார பிரச்சினைகளையே அவர்கள் வெளிப்படுத்தியதாக அவர்கூறினார்.

சக்திவாய்ந்த கட்சிகள், இத்தகைய ஜனநாய கமற்ற முறையில் பிரசாரங்களை மேற்கொள் கின்றன என அவர் கூறினார்.

# தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் தவறியுள்ளது

## - தேசிய தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் தவறியுள்ள தாக தேசிய தொழிற்சங்க சம்மேளனத் தின் தலைவர் கே.டி. லால்காந்த தெரி வித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதனை விடவும், அரசாங்கம் தனது இருப்பை உறுதி செய்து கொள் வதற்கு கூடுதல் ஆர்வம் காட்டி வருவ தாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்குச்சேவையாற்றக் கூடிய முற் போக்கான தலைவர்களை உருவாக்க வேண்டியது மக்களின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தேச நாடா ளுமன்ற தீர்வுத் திட்ட யோசனை வெற்றி யளிக்காது என்பது யாவரும் அறிந்ததே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களை மீள் குடியேற்றுதல்,

காணாமல் போனவர்கள் பற்றிய தக வல்களை வழங்குதல்,

கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய் தல்,

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்தல், வடக்கில் இராணுவ ஆட்சியை நீக்கி, சிவில் நிர் வாகத்தை ஏற்படுத்தல்

போன்ற முக்கிய விடயங்கள் குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இவ்வாறான உதாசீன மான போக்கே சர்வதேச சக்திகள் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்ய ஏது வாகின்றது என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

# பாலசூரியவின் தூதுவர் நியமனம்; பிரபல வர்த்தகர் சுர்பீக் ஆட்சேபம்

(கொழும்பு)



முன்னாள் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய வுக்கான தூதுவர் நியமனத்தில் பிரச்சினை ஏற்பட்டு உள்ளது. மஹிந்த பாலசூரியவுக்கு பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவர் பதவி வழங்கப்படுவதாக இருந்தது.

ஆனால் வர்த்தகர்களில் ஒருவரான எம்.ஜி.எம்.எஸ். சுர்பீக் என்பவர் மஹிந்த பாலசூரிய தூதுவராக நியமிக் கப்படுகின்றமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து உயர்பதவி களுக்கான நாடாளுமன்ற குழுவுக்கு தனது ஆட்சேபனை களை முன்வைத்துள்ளார்.

தூதுவர் பதவிக்கு மஹிந்த பாலசூரிய தகுதியற்ற வர் என்றும், அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியும் என்றும் வர்த்தகர் சுர்பீக் நாடாளுமன்றக் குழுவுக்குத் தெரிவித்துள்ளார். ஆட்சேபனைகள் அடங்கிய கடிதத்தின் ஒவ்வொரு பிரதியை பிரேசில் வெளியுறவு அமைச்சு, பிரேசில் நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கும் அனுப்பியுள்ளார்.

# வாழ்வாதாரக் கோழிகளை களவாடும் திருடர்கள்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம் பிரதேசத்தில் மக்கள் வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட கோழிகள் பல்வேறு இடங்களில் களவாடப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்ட பாண்டியன்குளம் பிரதேசத்தில் வாழ்வாதாரத் தொழில்களுக்காகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களினால் கோழிகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஒரு வீட்டில் 15 கோழிகள் வரை களவாடப்பட்டுள்ளது. அத்துடன் நேற்றைய தினம் பிறிதொரு வீட்டில் 7 கோழிகள் களவாடப்பட்டுள்ளது.

இதைவிட, கடந்த மாதமும் 4 வீடுகளில் கோழித் திருட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளினால் தமது அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (110)

# பெண்களின் குளியலறையைப் பார்த்த இலங்கையர் மீது துபாயில் வழக்கு

(கொழும்பு)

துபாயிலுள்ள கடைத்தொகுதியில் உள்ள பெண்களின் குளியலறைக்குள் மறைந்திருந்து எட்டிப் பார்த்ததாகக் கூறி இலங்கையர் மீது துபாய் நீதிமன்றில் வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

குறித்த இலங்கையர், தான் குளியலறையில் இருக்கும்போது கதவில் உள்ள துளையினூடாக மறைந்திருந்து பார்த்ததாக பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பெண் குற்றம் சாட்டியுள்ளார்.

குளியலறையில் கைகழுவிக் கொண்டிருக்கும்போது கண்ணாடியில் பார்த்த போது குறித்த இலங்கையர் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்ததை அவதானித்ததாகவும், உடனே கதவை தட்டியபோது குறித்த இலங்கையர் குளியலறையில் வேறு ஒரு பகுதியில் ஒளிந்து கொண்டதாகவும் பிலிப்பைன்ஸ் பெண் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரான இலங்கையர் ஒளிந்து கொண்ட கதவைத் தட்டிக் கூச்சலிட்ட போது அவர் வெளியே வந்ததாகவும், அவரது கைத்தொலைபேசியில் தன்னை படம் எடுக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்திய பின்னரே இச்சம்பவம் தொடரபில் முறையிடப்பட்டதாகவும் தெரிவிக்கபபடுகிறது.

இதுதொடர்பில் அரேபியப் பெண்ணொருவர் பொலிஸாரிடம் சாட்சியமளிக்கையில், குறித்த பெண் கூச்சலிட்டதைத் தொடர்ந்து சந்தேகநபர் மறைவிடத்தில் இருந்து வெளியேறியதாகவும், அதன்பின்னர் அங்கிருந்த பெண்கள் சந்தேகநபரை மடக்கிப் பிடித்ததாகவும் தெரிவித்தார்.

குற்றம்சாட்டப்பட்ட இலங்கையர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் இவர் குற்றமற்றவர் என நீதிபதி அப்துல் மஜீத் அல் நிசாம் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுதது்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தேர்தல் தொடர்பாக 3 முறைப்பாடுகள்

(மானிப்பாய்)

உள்ளூராட்சித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை தேர்தல் தொடர்பான மூன்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி சந்திரபால தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேட்பாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டமை, வேட்பாளர் ஒருவரின் வீட்டு வாசற்படலையில் நாயின் தலையை வெட்டி வைத்தமை, மற்றொரு வேட்பாளரின் வீட்டில் அசுத்தத்தால தெளித்தமை ஆகிய மூன்று முறைப்பாடுகள் கிடைக்கப பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தல் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் எல்லோரும் ஒருபிரதேசத்தில் வாழுகின்ற நண்பர்கள், உறவினர்களே. எனவே அனைவரும் இதனைப் புரிந்துகொண்டு அமைதியான முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேணடும் எனக்கேட்டுக்கொண்டுள்ளார். (கா)

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு அரசியலமைப்பைத் திருத்துவதிலேயாகும்

## என்கிறார் அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் தாம் இலங்கைப் பிரஜைகள் என்பதை அறிந்திருக்க வேண்டும். மக்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் காணப்பட்டால் முதலாவதாக அரசாங்கத்திடமே சொல்ல வேண்டும் அவ்வாறான முறைப்பாடுகளை வேறு நாடுகளிடம் முன்வைக்கக் கூடாது.

அவ்வாறு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் இலங்கையர் என்ற ரீதியில் இலங்கைக்கு எதிராக செயற்படுவதாக சிங்கள் மக்களிடம் சந்தேகம் ஏற்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதிகள் புனரமைப்பு

(வவுனியா)


வவுனியா தெற்குத் தமிழ் பிரதேச சபையினால் நெல்சிப் திட்டத்தின் மூலமாக பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வருவதாக பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார்.

நீண்ட காலமாக பிரதேச சபைக்கு மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்படாது இருநதமையினால் வீதிகள் புனரமைக்கப்படாது மக்களின் போக்குவரத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை இயங்க ஆரம்பிதததை அடுத்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நெல்சிப் திட்டத்தின் ஊடாக உக்கிளாங்குளம், செந்தூரன் ஆலை வீதி, தாலிககுளம் பாடசாலை வீதி, கற்குளம், 3 ஆம் யூனிட் வீதி என்பனவும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச சபைக்குட்பட்ட ஏனைய வீதிகள் செப்பனிடுவதற்கான பூர்வாங்க பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபையின் தலைவர் தெரிவித்தார்.



வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில், மீளத்திறக்கப்பட்ட கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றின் கல்விச் செயற்பாடுகளுக்கா கல்வி அதிகாரிகளால் குறித்த பாடசாலையின் அதிபர்களிடம் தளபாடங்களும், புத்தகங்களும் கையளிக்கப்படுவதனைக் காணலாம்.

# வெங்காய விலை சரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரெனச் சரிந்து காணப்படுகின்றது. திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் போன்ற பிரதான சந்தைகளில் வெங்காயம் கிலோ 60 ரூபா முதல் 70 ரூபா வரை விற்கப்படுகின்றது.

குடாநாட்டில் தற்போது வெங்காய அறுவடை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அவை சந்தைக்குத் தாராளமாக எடுத்து வரப்படுகின்றன.

இதன் காரணமாக அதன் விலை திடீரென சரிந்து காணப்படுகின்றது. கடந்த மாதங்களில் இதன் விலை கிலோ 130 ரூபாவிற்கு மேல் விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வி)

# வலிகாமம் கிழக்குப் பகுதியில் வெங்காயத்தில் நோய்த் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய கடும் வெப்பத்தால் வெங்காயப் பயிர்களில் ஒருவித நோய் ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கூடுதலாக வலிகாமம் கிழக்குப் பகுதி விவசாயத் தோட்டங்களிலேயே இந்த வெங்காயப் பயிர்கள் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வெங்காயப் பயிர்கள் மஞ்சல் நிறமாகிப் பழுத்து காணப்படுகின்றன.

நோய்க்கு இலக்காகிய இப்பயிர்களுக்கு விவசாயிகள் கிருமி நாசினியை விசிறி நோயைக் கட்டுப்படுத்தி வருகின்றனர். (வி)

# அரச காணிகளை விற்பனை செய்த சட்டத்தரணிகள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

போலியான உறுதிகளைத் தயாரித்து அரசாங்கக் காணிகளை விற்பனை செய்த பல சட்டத்தரணிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி ஆணையாளர் ஆர்.பி.ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டத்தரணிகள் பற்றிய தகவல்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு எதிராகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயத்தில் பிரதேச செயலாளர்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய சட்டத்தரணிகள் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# குவிக்கப்பட்ட கிரவல்கள் அகற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திறந்தவெளி அரங்கில் சுற்றாடல் பகுதியில் குவிக்கப்பட்ட கிறவல் மண் அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இந்தக் கிறவல் மண் அகற்றப்பட்டு வருகின்றன.

இதேசமயம் நவீன வசதிகளைக் கொண்ட அரங்கு ஒன்றை இப்பகுதியில் அமைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வி)

# இராணுவப் பேச்சாளரின் தொலைக்காட்சி விவாதத்தால் இரண்டு அமைச்சுக்களுக்கிடையே மூண்டது சர்ச்சை

## - என்கிறது கொழும்பு ஆங்கில நாளோடு

(கொழும்பு)

**இந்தியாவின் 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சியில் மறுஒளிபரப்பான இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்துடன் இணைந்து நடத்தப்பட்ட விவாதத்தில் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல பங்கேற்றது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.**

இதன் காரணமாக வெளிவிவகார அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் ஒன்றின் மீது ஒன்று குற்றம்சாட்டியுள்ளதுடன், முறுகலான நிலை ஒன்றும் ஏற்பட்டிருப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் என்ற ஆவணப்படத்துடன் இணைந்ததாக நேரடி விவாத நிகழ்வு ஒன்றையும் ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சி ஒளிபரப்பியிருந்தது.

கடந்த எட்டாம் திகதி இரவு இடம்பெற்ற இந்த நேரலை விவாதத்தில் இலங்கையின் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல செய்மதித் தொழில்நுட்பத்தின் மூலம் பங்கேற்றிருந்தார்.

சென்னையில் இருந்து இந்த நிகழ்ச்சி நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

இந்த விவாதத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இலங்கை இராணுவப் பேச்சாளர் உரிய வகையில் பதிலளிக்கவில்லை என்றும் நிகழ்ச்சியில் எதிர்த்தரப்பில் எழுப்பப்பட்ட பல வாதங்களுக்கு அவர் பொருத்தமான பதில் கூறாமல் விட்டதாகவும் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

அதேவேளை, இந்த நிகழ்ச்சி முழுவதுமே புலிகளுக்கு சார்பாகவே நடத்தபட்டதாகவும், நிகழ்ச்சியின் பின்னணியில் புலிகளின் கொடியும் கூட காண்பிக்கப்பட்டதாகவும் இலங்கை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் அது பக்கச்சார்பற்றது என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது. அரசின் தரப்பில் இழைக்கப்பட்ட மிகப்பெரிய தவறு என்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் இராணுவப் பேச்சாளரே பதிலளிக்க வேண்டும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளே அழுத்தம் கொடுத்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சி குறித்து முழுமையாக ஆராயாமல், இராணுவப் பேச்சாளரை இதில் பங்கேற்க வைப்பதற்காக ஜனாதிபதி ஊடாக வெளிவிவகார அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்

நிகழ்ச்சியின் மைய நோக்கத்தை புரிந்து கொள்ளாமல், இலங்கை அதிபரின் மூலம் இந்த நிகழ்ச்சியில் இராணுவப் பேச்சாளரை பங்கேற்க வைத்தது வெளிவிவகார அமைச்சு செய்த மிகவும் மோசமான விடயம் என்றும் அவர் மேலும் விமர்சித்துள்ளார்.

## இலங்கை உள்ளிட்ட 17 நாடுகளின் கரையோர காவல்படையினர் சந்திப்பு

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் உட்பட்ட பிராந்தியத்தைச் சேர்ந்த 17 நாடுகளின் கரையோரக் காவல்படையின் பிரதிநிதிகள் வியட்நாம் தலைநகர் ஹனோயில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். எதிர்வரும் அக்டோபர் மாதம் வியட்னாமில் நடைபெறவுள்ள மாநாட்டில் முன்வைக்கப்பட வேண்டிய பல முக்கியமான விடயங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

நாடுகளுக்கிடையேயான கடற்பிராந் திய சட்டங்களை சிறந்தமுறையில் அமுல்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. கடலில் ஏற்படும் அனர்த்தங்களின் போது உடனடியாக நாடுகள் இணைந்து மீட்டல் மற்றும் பாதுகாத்தல் போன்ற விடயங்களிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தங்கவைப்பதற்கு பெண்கள் பாதுகாப்பு தங்கும் நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள சிறுவர் விவகார மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ ஹரலியத்த தெரிவித்தார்.

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களை உடனடியாக வைத்துப் பராமரிப்பதற்கான இடங்கள் இல்லையென்ற விடயம் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து மேற்படி பெண்கள் பாதுகாப்பு தங்கும் நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அமைச்சின் ஊழியர்களுக்கு திஸ்ஸ ஹரலியத்த பணிப்புரை வழங்கியுள்ளார்.

# வாக்காளர் பதிவுச் சீர்த்திருத்தத்தில் புதிய நடைமுறை குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு வருடங்களிலும், வாக்காளர் பதிவு சீர்திருத்தத் திற்குப் பதிலாக மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய நடைமுறை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் ஆராய்ந்து வருகிறார்.

வாக்காளர் பதிவு ஒவ்வாரு வருடமும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் சீர்திருத்தப்படுகின்றது.

இதற்கமைய, மரணமானவர்கள் மற்றும் வெளிநாடு சென்றவர்களின் பெயர்களை மாத்திரம் வாக்காளர் பதிவேட்டிலருநது அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச கிராம சேவகர்கள் ஊடாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பெயர்ப் பதிவேட்டை ஒவ்வொரு வருடமும் சீரமைப்பதற்கு நீண்ட காலம் எடுக்கப்படுகின்றது.

எனினும், வாக்காளர் பெயர் பதிவேட்டில் அவசியமானவற்றை மாத்திரம் உள்ளடக்குவதன் மூலம் காலத்தை மிகுதிப்படுத்த முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சட்டத்திருத்தத்திற்கு ஏற்பாடுகள்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபெட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டம் போதுமானதாக இருக்கின்றபோதும், சுற்றிவளைப்புகளுடன் கூடிய சரத்திலேயே திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும், சட்டத் திருத்தம் தொடர்பிலான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள உததேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட வறிய நிலையில் உள்ள 12 குடும்பங்களுக்குக் கறவை மாடுகளும், 23 குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்பை மேற்கொள்ள கொட்டகை அமைப்பதற்கான பொருட்களும் 511 ஆவது பிரிகேட்டினால் அண்மையில் வழங்கப்பட்டது.

# ஊழியப்படையின் ஆயுள்காலம் குறைவடைந்து செல்கின்றது

## ஆய்வுத் தகவல்கள் எச்சரிப்பு

(கொழும்பு)

இலங்கை ஊழியப்படையின் ஆயுட்காலம் குறைவடைந்து செல்வதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிக எண்ணிக்கையிலானவர்கள் உரிய முறையில் தமது உடல் ஆரோக்கியத்தை பராமரிப்பதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மோசமான வாழ்க்கை முறைமை மற்றும் சுகாதார பழக்க வழக்கங்களினால் இலங்கை ஊழியப்படையினர் தமது ஆயுட்காலத்தை சுருக்கிக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவானவர்கள் இவ்வாறு உயிரிழப்பதனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதக விளைவுகளை உண்டு பண்ணும் என குறிப்பிடப்படுகிறது.

தொற்றாத நோய்களினால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீரிழிவு, இருதய நோய் போன்றவற்றினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இது ஓர் பாரதூரமான பிரசசினை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

சரியான உணவுப் பழக்க வழக்கம், உடற் பயிற்சி போன்றவற்றின் மூலம் ஆயுட்காலத்தை நீடிக்க முடியும் என ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு 3800 மலசலகூடங்கள் அமைக்கப்படும்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களினுடைய மலசலகூடப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் முகமாக 3,800 மலசலகூடங்களை உடனடியாக அமைப்பதற்கான நடவடிக்கையை சமுர்த்தி அதிகாரசபை மேற்கொள்ளவுள்ளது.

யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபையினருக்கும் வடமாகாண ஆளுநரின் தலைமையில் சமுர்த்தி ஊழியர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் தற்போது மீள்குடியேற்றம் நடைபெறும் பகுதிகளான மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மற்றும் வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் கலா 600 மலசலகூடங்கள் வீதம் 1,200 மலசலகூடங்களும் ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகங்களில் தலா 200 மலசலகூடங்கள் வீதம் 2,600 மலசலகூடங்களும் அமைக்கப்படவுள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களினால் உரிய பயனாளிகள் இன்னும் இரு நாட்களுக்குள் தெரிவுசெய்யப்பட்டு மலசல கூடங்கள் அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

# வித்தியாசமான ஆர்ப்பாட்டம்

ஒவ்வொன்றும் ஒரு விதம். ஆனால் சிலி நாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் மிகவும் வித்தியாசம் ஆனது. சிலி நாட்டு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றை சேர்ந்த விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பல





நூற்றுக்கணக்கானோர் வீதிகளில் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

சிலி நாட்டு அரசு கல்வி மற்றும் உயர் கல்வித்துறை ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும், கல்வி மற்றும் உயர் கல்வித்துறையில் மாற்றம் வேண்டும் என்று கோரியே ஆர்ப்பாட்டம் நடத்தினர். சரி. இவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் என்ன தெரியுமா? முத்தம் இடுகின்ற போராட்டம்.

# விலங்குகளின் உடற்பாகம் மீண்டும் வளருமா?

மரங்களை வெட்டினால் மீண்டும் வளரும் விலங்குகள் உடற்பாகங்கள் துண்டிக்கப்பட்டால் வளராதது ஏன்? விலங்குகளின் உறுப்புகளை உருவாக்கும் திசுக்களுக்கு நிரந்தரமாக விதிகள் விதிக்கப்பட்டு விடுவதால் மீண்டும் பல்கிப்பெருகி இரத்தம், நரம்பு, எலும்பு, தசை என்று உருவாக் கிக்கொள்ள முடியவில்லை.

தாவர திசுக்களில் பெரும் பகுதி இடத்திற்கேற்ப வேண்டிய திசுவாக மாற்றிக்கொள்ளும் இயல் பினைப்பெற்றுள்ளன. விலங்குகளில் "ஸ்டெம் செல்" என்ற ஒரு வகை திசு உடலிலேயே மறைந்திருக்கிறதாம். அதைத்தூண்டி விட்டால் உறுப்புகளை மீண்டும் பெற முடியும் என நம்பப்படுகிறது 'ஸ்டார் வ்விஸ் (Star Fish) என்கிற நட்சத்திர மீன் வகையை எத்தனை துண்டுகளாய் வெட்டினாலும் ஒவ்வொரு துண்டும், புதியதொரு மீனாய் உருவாகி வளருமாம். பல்லியின் வால் துண்டிக்கப்பட்டாலும் வளருவதைப் போல...

# நரம்புகளை வலுப்படுத்த...

மூளை, முதுகெலும்பு ஆகியவற்றில் உள்ள நரம்புகள் சேதம் அடைந்து இருந்தால் அவற்றை குணப்படுத்தி மீண்டும் வளர உதவும் மருந்து ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த மருந்து புளியங்கொட்டையில் இருந்து



உருவாக்கப்பட்டுள்ளது. பர்க்கின்சன் போன்ற நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களை குணப்படுத்துவதற்கான சிகிச்சையில் இந்த மருந்து ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



இந்த மருந்தை சர்வதேச விஞ்ஞானிகள் குழு பரிசோதித்து பார்த்து இது சேதம் அடைந்த நரம்பு செல்களை குணப்படுத்து வதில் மிகப் பெரிய பங்காற்றும் என்று தெரிவித்துள்ளது. இந்த மருந்தை காயம்பட்ட இடத்தில் திரவமாக ஊசி மூலம் செலுத்த முடியும் என்றும் அந்தக்குழு தெரிவித்தது.

# கூலாக வேலை செய்ய




Willy Wonka factory இதுதான் அந்த சொர்க்கபுரி. இங்கே வேலை செய்பவர்கள் மிகவும் கூலாக இருப்பார்களாம். காரணம் இவர்களின் வேலைத்தளத்தின் அமைப்பு அவ்வாறு அமைக்கப் பட்டிருக்கிறது. எப்போதும் போல ஒரே இடத்தில் இருந்து வேலை செய்வதால் மனதிற்கும் உடலிற்கும் சோர்வுதான் ஏற்படும்.



பல மில்லியன் பெறுமதியான Project செய்யும் போது இவ் வாறான சூழலையே இவர்கள் விரும்புகின்றனர். Google, Microsoft மற்றும் Skype என்பன தமது ஊழியர்களுக்கு இதுபோன்ற வசதிகளைக்கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# நேரம் இல்லாத கடிகாரம்

கடிகாரம் என்பது அத்தியாவசியமானதொன்று. அவசரமான உலகின் வேகத்தை அளவிடுகின்ற அற்புத கருவியாக கடிகாரம் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல. இப்படியிருக்கையில் கடிகாரங்களின் வடிவங்களும் புதிது புதிதாக வெளிவருகின்றன.



ஜப்பானின் "டோக்கியோ பிளாஸ்" என்னும் கடிகார வடிவமைப்பு நிறுவனம் அண்மையில் புதியவகை கடிகாரம் ஒன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. பார்ப்பதற்கு கைச்சங் கிலி போலிருக்கும். கையினை அழகு படுத்துகின்ற கைச்சங்கிலி என்றே பார்ப்பவர்கள் நினைப்பார்கள். ஆனால் அது கடிகாரமாகவும் செயற்படும். அந்த கைச்சங்கிலியில் இரண்டு பொத்தான்கள் இருக்கின்றன. அதில் ஒரு பொத்தானை ஒருதடவை அழுத்தினால் நேரத்தினைக் காட்டும். இன்னொரு முறை அழுத்தினால் மாதத்தினையும் திகதியினையும் காண்பிக்கும். சங்கிலிக்கோர்வையின் இடையில் பொருத்தப்பட்டிருக்கின்ற சிறிய LED திரைகளிலேயே இந்தநே.ம் தென்படும் விதத்தில் வடிவமைத்திருக்கிறார்கள். 130 அமெரிக்க டொலர்கள் (சுமார் 17 ஆயிரம் ரூபாய்) பெறுமதியில் இந்த கடிகாரங்கள் சந்தைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

# இருவிதமான கோப்புக்களைச் சரிபார்ப்பதற்கு...

ஏற்கனவே தட்டச்சு செய்த கோப்புக்கும் இப்போது மாற்றம் செய்த கோப்புக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை நொடியில் ஒன்லைன் மூலம் அறிந்து கொள்வதற்கு நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது. இரண்டு கோப்புகளில் என்ன வித்தியாசம் இருககிறது நம்மை சரி பார்க்கக்கூறினால் நாம் பார்க்கும் போது இரண்டும் ஒரே மாதிரித்தான் இருக்கும். ஆனாலும் சில வித்தியாசங்கள் இருக்கவே செய்யும். இதுபோன்ற வித்தியாசங்களை கண்டுபிடிப்பதற்கு ஒன்லைன் மூலம் நமக்கு உதவுவதற்காக இத்தளம் உள்ளது. இத்தளத்திற்குச் சென்று இடது பக்கம் இருக்கும் கட்டத்திற்குள் சரியாக இருக்கும் கோப்பையும் வலது பக்கம் இருக்கும் கோப்பின் எழுத்தையும் கொடுக்கலாம் அல்லது Choose File என்பதைச் சொடுக்கி நம்மிடம் இருக்கும் கோப்புகளையும் தேர்வு செய்யலாம். இரண்டையும் தேர்ந்தெடுத்தபின் Find Difference என்ற பொத்தானை சொடுக்கி இரண்டில் இருக்கும் மாற்றம் என்பதை நொடியில் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பிழையும் எளிதாக தெரிந்து கொள்ளும் வண்ணம் வேறு வண்ணத்தால் (Highlight) ஆகி இருக்கும்

இணையத்தள முகவரி:- http://diffchecker.com/

# எதிரியைத் தாக்கும் ஒக்டோபஸ்

பல விலங்கினங்கள் தமது எதிரிகளிடம் இருந்து தப்பிப்பிழைத்து வாழ, தோற்றத்தில் இயற்கையாகவே பல வினோத உடலமைப்பை கொண்டுள்ளன. இன்னும் சில விலங்குகள் தமக்கு ஆபத்து ஏற்படும் நேரத்தில் தமது வழமையான தோற்றத்தை மாற்றிக்கொள்ளும் திறன் படைத்தவையாக காணப்படுகிறது. உதாரணமாக பச்சோந்தி தாம் இருக்கும் இடங்களுக்கு ஏற்றாற்போல தமது நிறத்தை மாற்றும் திறன் கொண்டது. இவ்வாறான விலங்குகளின் செயற்பாடுகள் விஞ்ஞானத்தில் 'தக்கன பிழைத்தல்' என கூறப்படுகிறது. இது மாத்திரமின்றி சில விலங்குகள் எதிரிகளை அல்லது தமக்கு தேவையான இரையை பிடிப்பதற்காக இருக்கும் இடம் தெரியாமல் வேறு ஒரு சடப்பொருளை போன்று பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தும் திறன் கொண்டவை. இது கடல்வாழ் உயிரினமான octopus ஆகும். ஏனைய ஒக்டோபசில் இருந்து இது சற்று வேறுபட்டு காணப்படுகிறது. அது ஆங்கிலத்தில் mind blowing mimic octopus என அழைக்கப்படுகிறது. இது பல வடிவங்களில் மாற்றமடைவதை நீங்களும் அவதானிக்கலாம்..



# ஆங்கிலம் கற்க சிறந்த இணையங்கள்

உலக சர்வதேச மொழியான ஆங்கிலத்தை கற்றுகொள்ள பல இணையத்தளங்கள் உள்ளன அவற்றில் இருந்து நன்கு பயனுள்ள தளங்கள்

**1. FUN EASY ENGLISH**

அடிப்படை ஆங்கில அறிவுக்கான அதிக விளக்கத்தை இந்த தளத்தில் பெறலாம். சொல் உச்சரிப்பு மற்றும் இலக்கணம் என்பன பெரும்பாலும் வீடியோ ஆடியோ வசதியுடன் கற்று கொள்ள முடியும்.

**http://funeasyenglish.com/**

**2.GO 4 ENGLISH .COM**

இந்த தளம் பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு சொந்தமானது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கான ஆங்கில அறிவை இந்த தளம் வழங்குகிறது.

**http://go4english.co.uk/**

**3. LEARN ENGLISH FREE ONLINE**

ஆங்கில சொற்களுக்கான விளக்கத்தைப் படங்கள் மற்றும் வேடிக்கையாக கற்றுத் தருகிறது இந்த தளம்.


**http://www.learnenglish.de/**

**4.EXAM ENGLISH**

பிரபல சர்வதேச ஆங்கில தேர்வுகளை உள்ளடக்கிய ஓர் பரீட்சை வழி காட்டி தளமாகும் . இங்கு சென்று உங்கள் ஆங்கில அறிவினை பரீட்சித்து கொள்ள முடியும். **http://www.examenglish.com/**

கணினி மூலை

# உத்தரப்பிரதேசத்தில் ரயில் விபத்து; பலியானோர் தொகை 65 ஆக உயர்வு



(புதுடில்லி)

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட ரயில் விபத்தில் 65 பேர் உயிரிழந்துள்ளனர், 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மேற்கு வங்கம் மாநிலம் ஹவுராவில் இருந்து டில்லி நோக்கிச் சென்ற கல்கா எக்பிரஸ் ரயில் மதியம் 12.30 மணியளவில் உத்திர பிரதேச மா நிலத்தில் உள்ள கான்பூர் மற்றும் பத்தேஹ்பூர் மால்வா ரயில் நிலையங்களுக்கு இடையே திடீ ரெனத் தடம் புரண்டது. ரயிலின் 13 பெட்டிகள் தடம் புரண்டுள்ளன.

110 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டிருந்த போது அவசரமாக பிரேக்கை திடீரென்று பயன்படுத்தியதால் தான் ரயில் தடம்புரண்டதாகக் கூறப்படுகிறது. இந்த விபத்தில் 65 பேர் பலியாகினர், 200 நூறுக்கும் மேற்பட்டோர் பேர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்களை மருத்துவமனைக ளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். 2 மருத்துவ ரயில்கள் சம்பவ இடத்திற்கு உடனே விரைந்து பணிகளை மேற்கொண்டன. மீட்புப் பணிகளை மேற்கு வங்கப் பொலிஸாரும், இராணுவத்தினரும் மேற்கொண்டனர்.

## மீனவர் தாக்கப்படுவதைக் கண்டித்து கடல்முற்றுகைப் போராட்ட ஏற்பாடு

(சென்னை)

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து, அடுத்த மாதம் ராமேஸ்வரத்தில் பாஜக சார்பில், கடல் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மாமல்லபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது வேதனை அளிக்கிறது. மீன்பிடிக்கச் செல்லும் நமது மீனவர்கள் உயிருடன் திரும்புவது கேள்விக் குறியாக உள்ளது. இதைத் தடுக்க வேண்டிய மத்திய, மாநில அரசுகள் கடமையிலிருந்து தவறுகின்றன. இதுவரை நடவடிக்கை இல்லை.

ஆகஸ்ட் 7 ஆம் திகதி, தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து, ராமேஸ்வரத்தில் கடல் முற்றுகை போராட்டம் நடத்துவோம். அப்போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், கச்சத்தீவை மீட்கக்கோரி அங்கு தேசியக்கொடி ஏற்றுவோம் என்றார்.

## அரசியலில் தப்புக்கணக்கு போட்டுவிட்டார் வடிவேலு

### நடிகர் சிங்கமுத்து தெரிவிக்கிறார்

(ஈரோடு)



முதலமைச்சர் ஜெயலலிதா என்னென்ன வாக்குறுதிகள் அளித்துள்ளாரோ அவை அனைத்தையும் அச்சு பிசகாமல் ஆணித்தரமாக நிறைவேற்றுவார். இதற்கு அவர் ஒன்றன் பின் ஒன்றாகச் செயற்படுத்தி வரும் திட்டங்களே சாட்சி என நடிகர் சிங்கமுத்து தெரிவித்துள்ளார்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் தப்பு செய்தவர்கள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள். ஜெயலலிதா அப்பாவி ஏழை மக்கள் யார் மீதும் பொய் வழக்கு போடமாட்டார். ஏழைகளின் நிலத்தை மோசடியாக அபகரித்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடிகர் வடிவேலுக்கு இந்த சட்டமன்ற தேர்தலுக்கு முன்னதாக எந்த அரசியல் அனுபவமும் கிடையாது. என்னைப் போன்றவர்கள் எழுதிக் கொடுத்த வசனங்களைப் பேசி நடித்து மக்களிடம் கைதட்டல் வாங்கியதை வைத்து மக்கள் ஆதரவு தனக்கு இருப்பதாக கருதினார்.

நகைச்சுவை நடிகர்களுக்கு இனம், மொழி கிடையாது. யார் நடித்தாலும் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். அந்த கைதட்டலை பார்த்து, தான் சொன்னால் தமிழக மக்கள் ஊழல் ஆட்சிக்கு மீண்டும் வாக்குப்போடுவார்கள் என்று வடிவேலு கணக்குப்போட்டது தப்பாக முடிந்து விட்டது. நடிகர் விஜயகாந்த் குடிகாரர் என்று வடிவேலு பிரச்சாரம் செய்தார். ஆனால் வடிவேலு மொடாக்குடிகாரர் என்பது எனக்கு தெரியும் என்றார்.

## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 150 கிலோ கடலட்டை பறிமுதல்

(இராமநாதபுரம்)




இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்குக் கடத்த முயன்ற 30 ஆயிரம் ரூபா மதிப்புள்ள 150 கிலோ கடல் அட்டைகளை நேற்றுமுன்தினம் இந்தியக் கடற்படையும், வனத்துறையும் பறிமுதல் செய்துள்ளன. இது தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஆனந்தன்பாய் என்பவருக்குச் சொந்தமான படகில், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் 5 பேர் மீன்பிடித்துக் கொண்டிருந்போது, அவ்வழியே ரோந்து வந்த இந்தியக் கடற்படையினர் இவர்களின் படகினைச் சோதனையிட்டுள்ளனர்.

இதில், இலங்கைக்குக் கடத்தவிருந்த 50 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், படகில் இருந்த 5 மீனவர்களும் கைது செய்யப்பட்டு, மண்டபம் கடலோரக் காவல்படை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, மண்டபம் துறைமுக வீதி கடற்கரைப் பகுதியில் இருந்த மீன்பிடி நிறுவனங்கள் உள்ள பகுதியில், வனத்துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர்.

இதில் மண்டபத்தைச் சேர்ந்த ராமு மற்றும் சிவக்குமார் ஆகியோரது நிறுவனங்களில் 100 கிலோ கடல் அட்டைகள் பதுக்கிவைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து, அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இவ்விருஇடங்களிலும் சேர்த்து 30 ஆயிரம் ரூபா மதிப்புள்ள 150 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

## தெலுங்கான தனிமாநிலக் கோரிக்கை; 10,000 பல்கலை மாணவர் உண்ணாவிரதம்

(புதுடில்லி)


ஆந்திராவில் இருந்து பிரிந்து தனித்தெலுங்கானா மாநிலம் அமைக்கக்கோரி பல்கலைக்கழக மாணவர்கள் பத்தாயிரம் பேர் நேற்று முதல காலவரையறையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தடை உத்தரவையும் மீறி இவர்கள் நேற்று இப்போராட்டத்தில் இறங்கினர்.

ஆந்திராவை பிரித்து தெலுங்கானா தனிமாநிலம் அமைக்கக் கோரி கடந்த சில ஆண்டுகளாக தொடர போராட்டம் நடந்து வருகிறது. சமீபத்தில் இக்கோரிக்கையை வலியுறுத்தி தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த அனைத்து கட்சி உறுப்பினர்கள் தங்கள் பதவியை ராஜினாமாச் செய்தனர். இதனால் தெலுங்கானா விவகாரம் மீண்டும் சூடு பிடித்துள்ளது.

இந்த நிலையில் தெலுங்கானாவை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முதல் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கியுள்ளனர். இதற்காக உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் குவிந்துள்ளனர். இந்தப் போராட்டத்திற்கு பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை. ஆனாலும் தடையைமீறி மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

மாணவர்களின் உண்ணாவிரதம் காரணமாக ஐதராபாத்தில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்பதால் தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. தெலுங்கானா மாணவர்கள் அதிகளவில் படிக்கும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைச் சுற்றி ஏராளமான அதிரடிப்படைகள் குவிக்கப்பட்டுள்ளன. கலவரத்தைத் தடுக்க தண்ணீர்ப்பீரங்கி, கண்ணீர்ப புகைக்குண்டு வாகனங்கள் போன்றவை ஆங்காங்கே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. குதிரைப படை வீரர்களும் ரோந்து சுற்றி வருகின்றனர்.



இந்தியாவின் சனத்தொகை அதிகரிப்பை உணர்த்தும் வகையில் நிகழ்வொன்றில் காஞ்சிபுரம் பள்ளி மாணவிகள் அணிவகுத்து நின்ற காட்சி.

## அமைச்சரவை மாற்றம் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

இந்திய மத்திய அரசாங்கத்தில் நேற்று இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்ட அமைச்சரவை மாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மத்திய சட்டமா அதிபர் கோபால் சுப்பிரமணியம் தனது பதவியை ராஜினாமாச் செய்ததை அடுத்து இந்த அமைசசரவை மாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2ஜி ஸ்பெக்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர் தயாநிதிமாறன் பதவி விலகியதையடுத்து கடந்த ஓரிரு தினங்களாக இந்திய மத்திய அமைச்சரவையில் மாற்றம் குறித்து செய்திகள் பரவலாக இடம்பெற்று வந்தன. இந்தியப் பிரதமர் மன்மோகன சிங் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோர் சந்தித்து இது குறித்து கலந்துரையாடி வந்தனர். இந்த நிலையில் நேற்று அமைச்சரவை மாற்ற அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் திடீரென மத்திய சட்ட அதிபர் தனது பதவியை நேற்று இராஜிமானச் செய்ததையடுத்து இந்த அமைச்சரவை மாற்றம் ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அமைச்சரவை மாற்ற அறிவிப்பு இன்று அல்லது நாளை வெளியாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிதம்பரம், கபில்சிபலை பதவி விலக்க பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டும்

### பா.ஜ.வலியுறுத்து

(புதுடில்லி)

ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ள மத்திய அமைச்சர்கள் சிதம்பரம், கபில்சிபல் ஆகியோரை அமைச்சரவையில் இருந்து நீக்க பிரதமர் மன்மோகன்சிங் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பா.ஜ.க.செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்-


மத்திய அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. பிரதமர் மன்மோகன் சிங் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாவிட்டாலும், அவரது அமைச்சரவையில் உள்ள சிலர், ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ளனர். அவர்களைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஸ்பெக்ட்ரம் ஊழலில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்துள்ளது. ஒதுக்கீட்டில் ஊழல் செய்தவரில் ஒருவரான ராஜா, அமைச்சர் பதவியில் இருந்து வெளியேறிவிட்டார். இந்த ஊழலில் மத்திய அமைச்சர் சிதம்பரத்துக்கும் தொடர்புள்ளது. ஆனால் அவர் இன்னும் அமைச்சராக இருக்கிறார்.

தனியார் நிறுவனத்துக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை குறைத்த கபில்சிபலையும், மத்திய அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும். ஒரு பிராந்தியத்துக்கு 50 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டு இருந்த அபராதத் தொகையை, ஐந்து கோடி ரூபாவாக குறைக்க கபில் சிபலுக்கு யார் அதிகாரம் கொடுத்தது எனவும் அவர் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# உலகிலேயே நீளமான பாலம் பாதுகாப்பற்று உள்ளதாக சர்ச்சை




(பீஜிங்)

சீனாவில் குயிங்டவ் மற்றும் ஹுவாங்டவ் தீபகற்பத்தை இணைக்கும் வகையில், கடலில் கட்டப்பட்ட உலகிலேயே மிக நீளமான பாலம், பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக தற்போது சர்ச்சை எழுந்துள்ளது.

சீனாவில் கடலில் கட்டப்பட்ட இப்பாலம், 42.5 கி.மீற்றர் நீளமானது. பாலத்தின் இணைப்பு பகுதிகளில் விரிசல் இருப்பதாக, தற்போது சீனப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. கடந்த மாதம் 30ஆம் திகதி இப்பாலம் திறக்கப்பட்டதில் இருந்து, தினமும் 18 ஆயிரம் வாகனங்கள் பாலத்தில் செல்கின்றன. 10 ஆயிரத்து 580 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இப்பாலம், நிலநடுக்கம் உட்பட பேரழிவுகளை தாங்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

பாலத்தின் இணைப்புகளில் போடப்பட்டுள்ள போல்ட்கள், ஒயர் இணைப்பிற்காக அவ்வப்போது கழற்றப்பட்டு பின்னர் மாட்டப்படும். இதில், ஆபத்து எதுவும் இல்லை என்று, இப்பாலம் கட்ட நிதியுதவி வழங்கியுள்ள உள் கட்டமைப்பு நிறுவனம் பதில் அளித்துள்ளது. இப்பாலம் கட்ட நான்கரை ஆண்டுகள் பிடித்தது என்பது குறிப்பிடத்தக்கது

# ரஷ்யாவில் சுற்றுலாப் பயணிகளின் கப்பல் கடலில் மூழ்கியதால் 103 பேர் உயிரிழப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற கப்பல் மூழ்கியதில் 103 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. ரஷ்யாவின் மத்திய பகுதியில் லோவ்கா ஆறு ஓடுகிறது. இதில் கப்பல் மற்றும் படகு போக்குவரத்து நடைபெறுகிறது. நேற்று முன்தினம் ஒரு சொகுசு கப்பலில் 188 சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஊழியர்கள் பயணம் செய்தனர். தடார்சன் என்ற இடத்தில் சென்ற போது அந்த கப்பல் தண்ணீரில் மூழ்கியது.

இது குறித்து மீட்பு படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனே அவர்கள் அங்கு விரைந்து வந்தனர்.

அவசர காலத்தில் தண்ணீரில் மூழ்கும் 50 வீரர்களும் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் ஆற்றில் குதித்து தண்ணீரில் மூழ்கியவர்களை காப்பாற்றினார்கள். அவர்களில் 30 குழந்தைகள் உள்பட சுமார் 70 பேரை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. மற்ற 103 பேர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக இறந்தனர். அவர்களில் ஒருவர் பிணம் மட்டுமே மீட்கப்பட்டுள்ளது. மற்றவர்களின் பிணங்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த கப்பல் விபத்துக்கு மோசமான தட்பவெப்ப நிலையும், அதிக அளவு ஆட்கள் ஏற்றியதும் காரணம் என கூறப்படுகிறது. மேலும் இந்த கப்பல் பழையது என்றும், என்ஜின் கோளாறினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கருதப்படுகிறது. இதற்கிடையே இந்த விபத்துக்கான காரணம் குறித்து அறிய அதிபர் டிமிட்ரி மெத்வதேவ் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பல்கேரியாவை சேர்ந்தவர்கள். அந்நாட்டைசேர்ந்த 85 பேர் அதில் பயணம் செய்தனர்

# பாகிஸ்தானுக்கான இராணுவ உதவியில் 80 கோடியை நிறுத்தியது அமெரிக்கா

(வொஷிங்டன்)

பாகிஸ்தானில் அமைதி நிலையை ஏற்படுத்தவும் தீவிரவாதத்தை ஒடுக்கவும் அமெரிக்கா உதவி வருகிறது. கடந்த மே மாதம் 2ஆம் திகதி அல் கொய்தா தீவிரவாத தலைவர் பின்லேடன் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு அருகே உள்ள அபோதாபாத்தில் கொல்லப்பட்டார். தலைநகரில் இருந்து 30 மைல் தொலைவில் பின்லேடன் பல ஆண்டுகளாக பதுங்கி இருப்பது பாகிஸ்தான் அரசுக்கு தெரியாதா என அமெரிக்கா சந்தேகம் கொண்டு உள்ளது. பின்லேடனை அமெரிக்க கொமாண்டோக்கள் கொன்ற பின்னர் இருநாடுகள் இடையே உள்ள உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில் 80 கோடி டொலர் இராணுவ உதவியை அமெரிக்க நிறுத்தி வைத்துள்ளது. பாகிஸ்தானுக்கு வருடத்திற்கு அமெரிக்கா அளிக்கும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு இதுவாகும். இதுகுறித்து அமெரிக்க ஆயுதப்படைத் தலைவர் பில் டாலி கூறுகையில், பாகிஸ்தான் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. அதன் காரணமாகவே இந்த நிதி உதவியை நிறுத்தி வைத்துள்ளோம் என்றார். தீவிரவாதத்தை எதிர்த்து போராடுவதற்கு பாகிஸ்தான் முக்கியக் கூட்டாளியாகவும் இருந்தது என அவர் தெரிவித்தார். தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா விரும்புகிறது.

தமது இராணுவ பயிற்சியாளர்களை வெளியேற்றியதாலும் ஆத்திரம் அடைந்த அமெரிக்கா தற்போது இராணுவ உதவியை நிறுத்தி வைத்து உள்ளது.

பாகிஸ்தான் அரசின் வேண்டுகோளை தொடர்ந்து பிரிட்டிஷ் இராணுவப்பயிற்சியாளர்களும் பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் இருந்து கடந்த மாதம் வெளியேறியுள்ளனர்.

# கண்ணிவெடி அகற்றும் பணியாளர் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை

## - ஆப்கானில் சம்பவம்


(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த நான்கு நாட்களுக்கு முன் கடத்தப்பட்ட கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஏழு பேர் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பராக் மாகாணத்தில் நேட்டோ படைகளின் சார்பில் 30 பேர் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இவர்களை அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர்.

முதலில் இவர்களை தலிபான்கள் கடத்திச் சென்றதாக கூறப்பட்டது. பின்னர் கடத்தியவர்கள் கொள்ளையர்கள் எனத் தெரிந்தது. கடத்தப்பட்டவர்களில் ஏழு பேரின் தலை துண்டிக்கப்பட்ட உடல்களை பொலிஸார் நேற்று முன்தினம் கண்டெடுத்தனர்.

இவர்கள் ஆப்கான் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ளவர்களின் நிலை என்னவானது என்பது தெரியவில்லை. இதற்கிடையே கந்தகாரின் தெற்குப் பகுதியில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் நேட்டோ வீரர்கள் மூன்று பேரும், பொலிஸார் மூன்று பேரும் கொல்லப்பட்டனர்.



# குறள் சொல்லும் கதைகள் -49

## இன்பத்துப் பால்

## இமைப்பதில்லை

“ஏன் வித்தி வீணாக அழுகிறாய் கஜேந்திரன் ஏதாவது பிரச்சினை வந்தால் உன்னைத்தான் அழைத்துச் செல்வதாகச் சொன்னவர்தானே. அவர் உன்னை அழைத்துச் செல்ல மறுத்தால் துக்கப்பட வேண்டும். துயரப்படவேண்டும். அழவேண்டும் அவர் உடனே வா என்று சொல்லும் போது வீணாக வேதனைப்பட்டு அழுது அம்மாவுக்கும், மாமாவுக்கும் காட்டிக் கொடுக்கப் போகிறாயா தற்செயலாக உனது காதல் பிரச்சினை அம்மாவுக்குத் தெரிய வந்தால் அவர் உன்னை வெளியே செல்ல விடமாட்டார். நீ வெளியே செல்ல முடியாவிட்டால் எப்படி அவருடன் செல்ல முடியும். படிக்காதவள் மாதிரி அழுது கொண்டிராமல் முகத்தைத் துடைத்து விட்டு சந்தோசமாக இரு” என்றாள் அர்ச்சகா.

“எப்படிச் சந்தோசமாக இருப்பது அவர் எனது கண்களுக்குள் இருக்கிறார். அதனால் நான் கண் இமைத்தாலோ, நித்திரை கொண்டாலோ அவர் மறைந்து விடுவார் என்று எண்ணி நான் கண் இமைப்பதும் இல்லை: பகலில் உறங்குவதும் இல்லை. இதை அறிந்த எனது தோழியர் என்னைப் பரிகசிக்கிறார்கள்” விம்மினாள் வித்தியா.

“நல்லாய் அழு, அழுது காட்டிக் கொடுத்து விட்டு நாளைக்குப் பலத்த காவலோடு கொழும்புக்குப் போய் உன்அத்தானைக் கலியாணம் செய்” கோபித்தாள் அர்ச்சகா.

“என்னால் அவரை இழக்க முடியாது நீ நாளைக்கு எப்படியாவது அவரைச் சந்தித்து எனது நிலைமையை விளக்கிக் கூறு. முடிந்தால் நான் இன்று இரவு எல்லோரும் படுத்த பின்பு தொலைபேசியில் விபரத்தைக் கூறுகிறேன். தொலைபேசியில் நான் நெடுநேரம் பேசமுடியாது” என்றாள் வித்தியா.

“விடிந்ததும் நான் சென்று விபரமாக எல்லாவற்றையும் கூறுகிறேன். நீ அழாதை” என்றாள் அர்ச்சகா.

“அவர் மிகவும் கஷ்டப்பட்டதாலைதான் நான் காதலித்தனான். பின்புதான் அவரது குண இயல்புகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. என்னைப் பொறுத்தவரை அவர் என்னுடைய கடவுளடீ. நான் சொல்பவை எல்லாவற்றையும் கேட்பார் . தனக்கு விருப்பமில்லாவிட்டாலும் எனது மனம் கோணக்கூடாது என்பதற்காக நான் விரும்பியவற்றைச் செய்வார் .எனக்காக அவர் தனக்கு விருப்பமில்லாதவற்றைச் செய்வது எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால் இப்பொழுது தனக்குப் பிடிக்காதவற்றையும் எனக்காக மனம்மகிழ்வுடன் தனது எண்ணங்களை வெளிப்படுத்தாது செய்து முடித்து விடுவார். அத்துடன் பொறுமையில் மலைமாதிரியானவர் எக்காரணம் கொண்டும் என்னோடு கோபிக்க மாட்டார். நான் ஊடல் கொண்டால் அதைப் பெரிதாக எண்ணி மனம் வருந்துவார். அதனால் பொய்யாகக் கூடக் கோபம் கொள்ள முடியவில்லை. ஊடல் கொள்வதில் தான் காதலர்களுக்கிடையே நெருக்கமும், பிணைப்பும், இன்பமும் ஏற்படும் என்று சொல்வார்கள். அதனால் நான் ஊடல் கொண்டால் அதை அவர் பெரிதாக நினைத்து வருந்துகிறார். அவரின் இதயம் அனிச்சம் பூவை விட மிருதுவானது.”

“இதெல்லாம் தெரிந்த உனக்கு நான் புத்தி சொல்ல வேண்டுமா? பேசாமல் படு நான் போய் வருகிறேன்” என்றாள் அர்ச்சகா.

“ஏனடி அவசரப்படுகிறாய். நீ போனால் நான் துயரத்தால் துவண்டு விடுவேன். கொஞ்ச நேரம் இரு” என்றாள் வித்தியா.

அப்பொழுது தொலைபேசியின் மணி இனிமையாக ஒலித்தது. வித்தியா எழுந்தாள் “நான் அங்கஜன் கதைக்கிறேன். நீங்கள் யார்? வித்தியாவா...?”

“ம்” என்றாள் வித்தியா “அப்பாவை ஒரு முறை பேசச் சொல்லுங்கள்” என்றான் அங்கஜன் அர்ச்சகா வரதராசாவை அழைத்து வரச் சென்றாள்.

“அப்பா உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. நான் ஒரு மருத்துவக் கருத்தரங்கிற்காக இலண்டனுக்கு நாளைக்குச் செல்கிறேன். திரும்பி வர ஆறுமாதங்களாகும். அது வரை நீங்கள் உங்களது தங்கையுடன் இருங்கோ” வரதராசா கதைத்துக் கொண்டிருந்தார். அர்ச்சகாவும் வித்தியாவும் வெளியே சென்றனர்.

**கே.வி.குணசேகரம்.**

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும் இவ் வூர் 1129

கண்இமைத்தால் என் கண்ணுள் இருக்கும் காதலர் மறைந்து போவார். அதனால் நான் கண் இமைப்பதில்லை. இதனால் அவர் இரக்கமில்லாதவர் என்று ஊரவர் குறைசொல்கிறார்கள்.

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரச்சினை களுக்கு முகம் கொடுப்பதை தவிர்க்கின்றார் எனவும் அவர் காலத்தை இழுத்தடிக்கின்றார் எனவும் உலகம் நம்புகின்றது. இதையும்விட கூடுதலாக தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் நம்புகின்றன. ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தத் தருணத்தில், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வையும் சமாதானத்துக்கான செய்தியையும் வழங்க முடியாது போயின் வேறு எந்த ஜனாதிபதியாலும் இனிவரும் பல தசாப்தங்களுக்கு இதை செய்ய முடியாது.**

அரசியல் தீர்வு மற்றும் அதிகார பகிர்வு வழங்குவதற்கான சட்ட மூலத்தை வரைவதற்கு ஒரு நாடா ளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவது பல விதமான ஊகங்களுக்கு இடமளித்துள்ளது.

இதுவரை காலமும் அரசாங்கம் அவர் நாட்டின் பலவகைப்பட்ட சமுதாயங்களையும் தன்னோடு அணைத்து செல்ல வேண்டும். முதலில் அவருக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பும், தமிழ் புலம்பெயர்ந்தோரின் உறுதிப்படுத்தலும் அவசியம். அப்போதுதான் ஒரு அரசியல் தீர்வு வெற்றிபெறும்.



இந்த வகையில் பரஸ்பர நம்பிக்கையீனம் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதை தவிர்க்கின்றார் எனவும், அவர் காலத்தை இழுத்தடிக்கின்றார் எனவும் உலகம் நம்புகின்றது. இதையும்விட கூடுதலாக

# இப்போது இல்லையேல் எப்போதும் இல்லாமல் போகும்

பல சந்தர்ப்பங்களில் சட்டமூலத்தை வரைவதிலேயே காலத்தை போக்கியுள்ளது. நாடாளுமன்றத்தின் தெரிவுக் குழுக்கள் இவ்வாறான சட்டமூலங்களை பல கோணத்திலும் ஆராய்ந்துள்ளன. முழு நாடாளுமன்றமும், சில சமயம் நீதிமன்றங்களும் இவை பற்றி கருத்துக் கூறியுள்ளன.

தயாரிக்கப்பட்டதாக கூறப்படும் ஒரு திட்டத்தின்படி, அது தேசியப் பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எட்டுவதை நோக்கமாக கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆளும் தரப்பிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுள்ள நிலையில், அதனால் இருபக்க மாகவும் செயற்பட முடியும். யாப்பை திருத்துவது உட்பட, தான் விரும் பியதை நாடாளுமன்றத் துக்கூடாக நிறைவேற்றமுடியும். இரண்டாவதாக "ஜனநாயகத்தை" செயற்பட விடலாம். அதாவது கூட்டமைப்பில் உள்ள சிறுகட்சிகளையும் அழுத்தக் குழுக்களையும் தமது விருப்பம்போல நடக்க அனுமதிக்கலாம்.

எப்படியிருந்த போதிலும், அரசாங்கம் முழுநாட்டு மக்களையும், சிங்கள பெரும்பான்மை சமுதாயத்தை தன் வழிக்கு இழுக்க வேண்டும். அதேசமயம் இலங்கைத் தமிழ் சிறுபான்மையினரின் நியாயமான அபிலாஷைகளை திருப்தி செய்யக்கூடிய ஒரு நீதியான பொதியை உறுதி செய்யும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலக முடியாது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தை ஜனாதிபதி ராஜபக்ஷ வென்றுள்ள சாதகமான நிலையில் சமாதானத்தையும் அதேபோல கொண்டு வரக்கூடிய ஆற்றலும் அவருக்கு உண்டு என பொது அபிப்பிராயம் காணப்படுகிறது. முழு நாட்டினதும் விருப்பப்படியே அவர் யுத்தத்தை வென்றார். நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் நம்புகின்றன. ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தத் தருணத்தில், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வையும் சமா தானத்துக்கான செய்தியையும் வழங்க முடியாது போயின், வேறு எந்த ஜனாதிபதியாலும் இனிவரும் பல தசாப்தங்களுக்கு இதைச் செய்ய முடியாது.

இது தமிழ் அரசியல் தலை மைக்கும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் உண்மையாகும். யுத்தத்திற்கு முன்னரான எதிர்பார்ப் புகள், இலக்குகளிலும் பார்க்க குறைந்த அவ்வப்போது கிடைக்கும் சிறுசிறு அளவிலானதும் சமச்சீர் அற்றதுமான இணக்கப்பாடுகளை ஏற்றுக்கொள்வதும் விரும்பக் கூடியதே என்பதை தமிழ் சமுதாயத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய தற்போதைய தமிழ் தலைமையால் இதைச் செய்ய முடியாது போகுமாயின் வேறு எப்போதும் இதைச் செய்ய முடியாது போகும்.

இப்படித்தான் இவை இருக்குமென்றும், அவை ஏன் அப்படி நடக்க வேண்டுமென்றும் கருதுகோள் ரீதியாக கூறப்படுவதற்றில் தவிர்க்கக்கூடியவை எவை என அரசாங்கம் தெரிந்திருக்க வேண்டும்.

இருபகுதியினரும் கணிசமான பரஸ்பர நம்பிக்கையீனத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். புலிகளினால் பணயக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்த 3 இலட்சம் தமிழ் மக்களை இராணுவம் விடுவித்ததையிட்டு ஆறுதல் அடைந்த தமிழ் சமுதாயத்தின் ஒரு பகுதி கூட இப்போது அரசாங்கத்தின் மீது யுத்த குற்றங்கள், மனிதப்படுகொலை எனக் குற்றஞ் சாட்டிக் கொண்டுள்ளது.

அந்தந்தக் காலத்து அரசியல் தலைவர்கள், அரசாங்கங்களை தவிர்த்துப் பார்த்தால் புலிகள் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் அவர்களுடன் கூட்டாக 'இயங்கியதாக பார்க்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை அரசால் பிரச்சினையாகவே நோக்கப்படுகின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு யுத்தத்தின் பின்னரான நிலைமைபற்றி செய்யும் விமர்சனங்களையும் சிங்கள சமுதாயத்தின் ஒரு பகுதியினர் சந்தேகத்துடனனேயே நோக்குகின்றனர். தனிநாட்டுக்கான கோரிக்கையை தமது வருங்கால சந்ததியினர் மீட்டெடுப்பதற்கான கால அவகாசத்தை பெறுவதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோககமென அவர்கள் கருதுகின்றனர்.

இந்த பின்னணியில்தான் அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதிகாரப் பகிர்வுக்கான உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தையை இவ்வருடம் ஜனவரி மாதத்தில் ஆரம்பித்தனர். ஆறுமாதம் கடந்த நிலையிலும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு அதிகாரப்பகிர்வுக்கான முன்மொழிவுகளை தயாரிப்பது பற்றி இப்போது பேசப்படுகின்றது. அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அடிப்படை விடயங்களிலாவது ஒருமைப் பாட்டுக்கு வந்து விட்டனரா, அதிகார பகிர்வு தொடர்பில் சட்டங்களை வரையும் கட்டம் வந்து விட்டதா என்பன பற்றி எதுவும் தெரியவில்லை.

அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்கின்றது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது. பொலிஸ் மற்றும் நிலம் தொடர்பான அதிகாரங்கள் போன்ற அடிப்படை அதிகாரப் பகிர்வு விடயங்களில் அரசாங்கம் முரண்பாடான சமிக்ஞைகளை தொடர்ச்சியாக காட்டி வருகின்றது. முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் ஏற்கப்பட்டிருந்தால் அவை அனைத்தையும் அடக்கியவையாக இருந்தனவா அல்லது குறித்த ஒரு சிறு பிரச்சினைக்கு மட்டும் உரியதாக இருந்ததா என்பதுவும் தெளிவாக இல்லை.

முக்கிய பிரச்சினைகளில் முரண்பாடான நிலைப்பாடுகள் பல தரப்பினரிடமும் காணப்படுவதற்கு அப்பால், தற்போதைய யாப்பும் பிரச்சினையை தோற்றுவிப்பதாகவே உள்ளது. அரசியலமைப்பில் கூறப்பட்ட அதிகாரப் பகிர்வை அமுலாக்குவதிலும் இழுத்தடிப்பு காணப்படுகிறது. மாகாண சபைகளுக்கும் மத்திய அரசுக்கும் பொதுவான அதிகாரங்களைக் கொண்ட பொதுப் பட்டியலும் குழப்பத்துக்கு காரணமாக உள்ளது. இதைப் பார்க்கும்போது தற்போதைய அரசியல் ஸ்தம்பித நிலைக்கு அரசியலமைப்பு காரணமாக அல்லது அதை நடைமுறைப்படுத்தும் முறை, காரணமா என்பதை தெளிவாக கூறமுடியாது உள்ளது.

கடந்த சில வாரங்களாக, ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும், எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் எதிர்த்தரப்பு தமது கருத்தைச் சரியாகக் கூறவில்லை என்றும் இதனால் தாம் எதுவும் செய்ய முடியாது உள்ளதாகவும் ஒன்றையொன்று குற்றஞ் சாட்டி வருகின்றன. அரசாங்கத்தின் பங்காளியான வலதுசாரி ஜாதிக ஹெல உறுமய அதிகாரப் பகிர்வு தொடர்பிலும், த.தே.கூ. தொடர்பிலும் இறுக்கமான கருத்துக்களை கொண்டுள்ளது. இடதுசாரியாக இருந்தும் சிங்கள தேசியவாத கட்சியாக வித்தியாசமாக இயங்கும் கட்சியாக ஜே.வி.பி உள்ளது.

இப்போது அதன் நாடாளுமன்ற பலம் மிகவும் குறைந்துள்ள நிலையில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் போக்கின்மீது செல்வாக்கு செலுத்த முடியாது. ஆனால், இக்கட்சி வேறு பிரச்சினைகளில் அரசாங்கத்தை தாக்குவதில் நாடளாவிய ரீதியில் தனது சக்தியை வெளிப்படுத்தி வருகின்றது. ஜே.வி.பி இரண்டு கிளர்ச்சிகளுக்கு காரணமாக இருந்தது என்பது எந்த ஒரு ஆட்சியையும் யோசிக்க வைக்கும் விடயமாக உள்ளது. யுத்தம் முடிந்தபின் ஜே.வி.பி. தமிழர் பிரச்சினையில் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றது. இது எவ்வளவு தூரம் நடைமுறையில்



பலன் தரவல்லதாக இருக்குமென்பது தெளிவில்லாமலேயே உள்ளது.

தமிழ் பேசும் மக்கள் பக்கத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடும் கவனிக்கப்பட வேண் டும். யுத்தம் முடிந்த காலத்திலிருந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் தன்னால் ஒரு ஏற்பாட்டை செய்து கொள்ள முடியும் என்பது போல அது நடந்து வந்தது. ஆனால், முன்னர் ஒஸ்லோ பேச்சுவார்த்தை யின் போது கோரியது போலவே இப்போது தன்னையும் பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பாக சேர்க்க வேண்டுமெனக் கோரியுள்ளது. இந்த கட்சி யுத்தக் குற்றம் மற்றும் பொருளாதாரத் தடை ஆகியவை தொர்பில் தமிழ் நாடு சட்டசபையை கண்டித்ததன் மூலம் தன் தேசப்பற்றை முன்னெப்போதும் இல்லாத வகையில் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை தமிழ்மக்களுக்கும் மலைநாட்டுத் தமிழருக்குமிடையில் காணப்படும் வித்தியாசங்களைப் பற்றி பேசாதிருப்பது நல்லது. இலங்கைத் தமிழர்களுக்குள்ளும், விரிந்த அளவில் தமிழ்பேசும் மக்களுக்குள்ளும் ஒற்றுமையை உருவாக்கும் என எதிர்பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இந்த பொறுப்பை நிறைவேற்றவில்லை என்றே கூறலாம். இவர்களுக்கு இடையே காணப்படும் உட்பூசல்களும் வெளியே வரத் தொடங்கியுள்ளன.

இந்தச் சிக்கலிலிருந்து விடுபடுவதற்கான பொறுப்பு அரசாங்கம் மற்றும் த.தே.கூ. அல்லது தமிழ்க் கட்சிகள் என்பதற்கு அப்பாலும் விரிந்து மேலும் பங்குதாரர்களை உள்ளடக்க வேண்டுமாயின், ஒருவரை மற்றவர் நம்பச் செய்யவும் ஏனையோரை நம்பச் செய்யவும் வைக்கும் ஆரம்பப் பொறுப்பு அரசாங்கத்திடம் மட்டுமன்றி த.தே.கூட்டமைப்பிடமும் உள்ளது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இவர்களில் எவரும் மற்றவர் மீது பழிபோடும் விளையாட்டை தொடர்ந்து கொண்டு தமது நிலைமையில் முன்னேற்றம் வரும் என எதிர்பார்க்க முடியாது.

- என்.சத்தியமூர்த்தி

# விவசாயக் குளங்கள் குத்தகைக்கு இனி அவை படகோட்டும் தடாகங்கள்

## அரசு மீது கணை தொடுக்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

எதிர்காலத்தில் நீரின்றி விவசாயப் பயிர்கள் நாசமடைந்தாலும் விவசாய நிலங்களுக்கு குளங்கள், வாவிகள் ஊடாக நீர் விநியோகிக்க முடியாத நிலை ஏற்படும் என மக்கள் விடுதலை முன்னணி அபாய அறிவிப்பு விடுத்துள்ளது.

நெற் பயிர் நிலங்களுக்கு நீர் விநியோகிக்கும் மின்னேரியா குளம், மினிப்பே குளம், பராக்கிரம சமுத்திரம், தோபா குளம், யோத வாவி, திஸா வாவி உள்ளிட்ட 22 குளங்கள் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நிறுவனங்களுக்கு வரிக்கு வழங்க டெண்டர் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்யாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

1978ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்படுத்தியது. ஐக்கிய தேசியக் கட்சி 17 வருடங்களுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 34 வருடங்களுக்கும் இக்கொள்கையின் கீழ் ஆட்சி புரிந்து வந்துள்ளன.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டின் பல இடங்களை தனியார் சங்கங்களுக்கு விற்பனை செய்த வண்ணம் உள்ளது. சேனாநாயக்க, மஹாவெலி போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள் ஊடாக விவசாயக் குடும்பங்களின் மூன்றாம், நான்காம் பரம்பரைக்கு பயிர் செய்ய நிலம் இல்லாது போய்விடும்.

நீர் கூடிய இடங்களில் ஹோட்டல் கட்ட முனைகின்றனர். நீர் காணப்படும் இடங்களை சுற்றுலாத் தளமாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

இதன் மூலம் விவசாயிகளுக்கான நீர் விநியோகத்துக்கு அரசாங்கம் முன்றுப்புள்ளி வைத்துள்ளது. என சமந்த வித்யாரட்ன குறிப்பிட்டார்.

### யாழில் தேர்தல்...

நடவடிக்கைக்கும் உத்தரவிடப்பட்டிருப்பதாகவும், குறித்த முறைப்பாடு குறித்து பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கை குறித்து தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்தார்.

கிடைத்திருக்கும் இம்முறைப்பாடுகள் குறித்து யாழ்.செயலகத்தில் நாளை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் பாதுகாப்புத் தரப்பினர், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர் பிரதிநிதிகள் கூடி ஆராயவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதில், பாதுகாப்புத் தரப்பில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அதிகாரிகள், யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இக்கலந்துரையாடலில் எதிர்காலத் தேர்தல் நடவடிக்கை குறித்தும் பரசீலிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

### வடக்கில் இந்திய...

அனைத்தும் ஒரு முன் அடையாளமாகுமெனவும் இதன்போது அவர் கூறினார். அதேவேளை, இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்தியாவினால் அமைக்கப்படும் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளில் ஏற்பட்டுள்ள நீண்ட தாமதம் குறித்து அவர் பி.பி.சி.க்கு விளக்கமளிக்கையில், வீடுகளை அமைப்பதற்கான இடங்களை தமது ஒப்பந்தக்காரர்களிடம் கையளிப்பது தொடக்கம், பயனாளிகளைத் தெரிவு செய்வது வரையில் பல விடயங்களில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள், தாமதங்களினால் இந்தத் திட்டம் தாமதமாகியிருக்கின்றது என அவர் கூறினார்.

அத்துடன் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கின்ற இந்தத் திட்டமானது உலகத்திலேயே இந்தியாவினால் மேற்கொள்ளப்படுகின்ற மிகவும் பெரியதோர் வேலைத்திட்டம். எனவே இதனை தாங்கள் மிகவும் கவனமாகக் கையாள வேண்டியிருக்கின்றது. எனினும் இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாகிய ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவேற்றப்பட்டு விடும் என்று இந்தியப் பிரதித் தூதுவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் நல்ல ஒத்துழைப்பை வழங்கி வருவதாகக் குறிப்பிட்ட அவர், இன்னும் இரண்டு வாரங்களில் இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ் 40 அல்லது 50 வீடுகள் முற்றாகக் கட்டி முடிக்கப்பட்டுவிடும். அந்த வீடுகளை இந்தமாத இறுதிக்குள் பயனாளிகளுக்கு வழங்குவதற்கும் திட்டமிட்டி ருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

### காணிப்பிரச்சினை...

பணிப்பாளர் ஹரிகுப்தா ரோஹனதீர குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை காலமும் இனங்காணப்படாதிருந்த அரசாங்கக் காணிகள் தற்போது இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் கடந்த சில மாதங்களாக யாழ்.மாவட்டத்தில் மேற்கொண்டு வந்த ஆய்வுகளின்போது இந்த காணிகள் இனங்காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை உரிய தரப்பினருக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது. யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த மக்கள் காணி தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள இதுவரை காலமும் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆணைக் குழுவின் பிராந்திய அலுவலகங்களுக்கு வரவேண்டியிருந்தது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் யாழ்.நகரில் விசேட அலுவலகம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் , குடாநாட்டு மக்கள் காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்

### வடக்கில்...

தேர்தல் வன்முறையைக்

கண்காணிக்கும் நிறுவனம் என் பன கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அனுமதி வழங்கியுள் ளதாக யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்துள்ளார். இவ் அமைப்பின் குறித்த வாக்களிப்பு நிலையங்களில் தங்கியிருந்து நடைபெறவுள்ள தேர்தல்கள் தொடர்பான தமது கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளரினால் ஒழுங்குகள் செய்து கொடுக் கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

### அக்கராயனில்...

நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் துயரங்களை அறிவோம். நாம் பயணம் செய்த அனைத்துக் கிராமங்களிலும் பெற்றோர்கள் தடுப்பிலுள்ள தமது பிள்ளைகளை விடுவிக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

அரசும் படிப்படியாக தடுப்பிலுள்ளவர்களை விடுவித்து வருகிறது. இவ்வாண்டுக்குள் தடுப்பிலுள்ள அனைவரும் விடு விக்கப் படுவார்கள். அத்துடன், அக்கராயனில் போரினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு 100 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்.

மக்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள அரசாங்கத்தை ஆதரிப்பவர்களோடு வெற்றிலைக்கு வாக்களித்து அரசுடன் மக்கள் நிற்கின்றார்கள் என்ற ஆதரவினை வெளிப்படுத்த வேண்டும். அரசாங்கம் வெற்றி பெறுகின்ற போது தான் மக்கள் இலகுவான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (121)

### பூநகரியில்.....

மணியளவில் பூநகரி நகரிலிருந்து நாகதேவன்துறை வரை செல்லும் 41/2 கிலோ மீற்றர் தூரமான வீதிப் புனரமைப்பு வேலைகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஆரம்பித்து வைத்ததுடன், பெயர்ப் பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதில் உடனடியாக 50 வீதிகள் தார்க்கலவை போடப்பட்டுச் சீர் செய்யப்பட்டது. அத்துடன், முக்கொம்பன், சித்தன் குறிச்சி, ஆலங்கேணி ஆகிய பகுதிகளில் பல வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கான ஆரம்பகட்டப் பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

பிற்பகல் ஒரு மணியளவில் பூநகரி மகா வித்தியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலை கட்டடங்களைப் பார்வையிட்டதோடு, பாடசாலையின் குறைபாடுகள் பற்றி அதிபர், ஆசிரியர், மாணவர்களுடன் கலந்துரையாடினார். (112)

## காலியில் நவீன பஸ் நிலையம் ஜனாதிபதி நேற்று திறந்துவைத்தார்



(கொழும்பு)

காலியில் 405 மில்லியன் ரூபா செலவில் நவீன பஸ் தரிப்பிடம் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால். திறந்து வைக்கப்பட்டது.

இரண்டு மாடிகளைக் கொண்ட இப்புதிய பஸ் நிலையம் 161 மீற்றர் நீளமும், 10 மீற்றர் அகலமும் கொண்டது. இது இலங்கையின் மிகவும் நீளமான பஸ்தரிப்பு நிலையமாகும். இதற்கான நிதியைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியிருந்தது.

16 கடைகள், ஒரு போசனசாலை, 4 பத்திரிகைகள் விற்பனைக் கடை, 2 ஆண்கள், பெண்களுக்கான இளைப்பாறும் இடம், அங்கவீனர்களுக்கான இளைப்பாறும் இடமொன்றையும் கொண்டுள்ளது.

இது நாளாந்தம் 692 பஸ்கள், 165680 பயணிகள் உபயோகப்படுத்தும் ஒரு நிலையமாகும். மேலும் 41 மீற்றர் நீளமான பாலத்தால் காலிப் புகையிரத நிலையத்துடன் இணைக்கின்றது.

2004 ஆம் ஆண்டு சுனாமியின் போது முழுமையாக அழிந்து போன பழைய பஸ்தரிப்பு நிலையத்தைக் கட்டுவதற்கு கடந்த வருடம் ஒக்ரோபர் 03ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## க.பொ.த. உயர்தர விடைத்தாள் மதிப்பீடு புள்ளியிடல் திட்டம் வழங்க மறுப்பு

கல்வித்துறை சார்ந்த பல்கலைக்கழகப் பணியாளர்கள் 2011 க.பொ.த (உ/த) பரீட்சை தொடர்பில் விடைத்தாள்களுக்கு புள்ளியிட அவசியமான புள்ளித் திட்டத்தை வழங்க மாட்டார்களென பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.


புள்ளித்திட்டம் இல்லாமல் 2011 க.பொ.த. (உ/த) விடைத்தாள் மதிப்பீடு நடக்க முடியாதென பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கச் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிரி தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் பரிகசிக்கும் வகையிலான விமர்சனமே பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் உயர்மட்டக்குழு இந்த முறையை எடுக்க காரணமாயிற்றுதென அவர் கூறினார்.

அமைச்சர் குணவர்த்தன விரிவுரையாளர்களை அவமதித்துள்ளார். அத்துடன், எமது கோரிக்கைகளையிட்டு கேவலமாக பேசியுள்ளாரெனக் கூறிய கலாநிதி தேவசிரி, கல்வித்துறை சார்ந்த பணியாளர்களின் கோரிக்கை நியாயமானதென கூறினார்.

செய்திப்பாணம்

வீதிகள் பழையன விபத்துகள் அதிகரிக்க
சாதிபல வாகனச் சஞ்சாரம் - மோதிடற்கு
ஊரிப்பட்ட இறக்குமதி, உற்பத்தி யாதல்போல்
காரியமா அகலிக்கா சாலை!



# பேராசிரியர் சிவத்தம்பிக்கு யாழ்.பல்கலையில் அஞ்லி




(யாழ்ப்பாணம்)

மறைந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பிக்கு யாழ் பல்க லைக்கழகம் தனது அஞ்சலியைச் செலுத்தியுள்ளது. நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பல்க லைக்கழக மாணவர் சங்க ஏற் பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நூற்றுக் கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் தமது விரிவுரை களை இடைநிறுத்தி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டா ர்கள். பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கா.தவபா லன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத் துணைவேந் தர் செல்வி வசந்தி அரசரட்ணம் கலந்துகொண்டிருந்தார். பல்க லைக்கழகத்தின் விரிவுரை யாளர்கள் பலர் கலந்துகொண் டிருந்தனர்.

அங்கு சிறப்புரை களும் இடம்பெற்றிருந்தன. செல்வி வசந்தி அரசரட்ணம் பேராசி ரியர் சிவத்தம்பி அவர்கள் மும்மொழிகளிலும் கொண்டி ருந்த பாண்டித்தியமே அவர் சர் வதேச அளவில் புகழ்பெறக் காரணமாயிருந்தது எனத் தெரி வித்ததுடன் பல்கலைக்கழக மாணவர்கள் இதனைப் புரிந்து கொண்டு மொழி மேம்பாட்டிற்கு பாடுபடவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.



# அழகியல் பாட ஆசிரியர்கள் யாழில் விரைவில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அழகியல் பாட பட்டதாரி ஆசிரியர்களுக் கான நிரந்தர நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ள தாக வடமாகாணக் கல்வி அமைப பினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 420 ஆசிரியர்களின் விபரங்கள் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாகவும் நியமனம் வழங்குவது தொடர்பாக இசுரு பாயாவிலிருந்து அனுமதி கிடை த்ததும் நியமனக்கடிதம் வழங் கப்படும் என அமைச்சினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

# இந்தியாவில் பொறியியல் கல்வி இலங்கையர் 69 பேர் விண்ணப்பம்

இந்தியாவின் நடப்புக் கல்வி யாண்டில் கலந்தாய்வு மூலம் பொறியியல் கற்கைநெறியில் இணைந்து கொள்வதற்காக 69 இலங்கை அகதிகள் விண்ணப் பித்துள்ளனர்.

தமிழக அரசின் அனுமதியின் பேரில் கலந்தாய்வு மூலம் ஒவ் வொரு ஆண்டும் இலங்கை அகதிகள் பொறியியல் படிப் புகளில் சேர்க்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் அகதிகள் குறைந்த பட்சம் 5 ஆண்டு பள்ளி படிப்பை தமிழகத்தில் மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கலந்தாய்வு மூலம பொறியியல் கற்கைநெறிக்கு அனும...கப்பட்டு வருகின்றனர் என இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

# வீதி அகலிப்பு துரிதமாகிறது

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ்.வீதி, மற்றும் பருத்தித்துறை வீதியின் அக லிப்புப் பணிகள் மேலும் விரைவு படுத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதியின் அக லிப்புப் பணிகள் தற்போது கோப் பாய் சந்தியில் இருந்து ஆரம் பிக்கப்பட்டு துரிதவேகத்தில் வீதியோரங்களில் இருந்த கட்ட டங்கள் பின்னோக்கி அகற்றப் பட்டு அகலிப்புப் பணிகள் துரிதப படுத்தப்பட்டுள்ளன.

இந்த பிரதான வீதியில் இரு ந்த பாலங்கள் மற்றும் கால் வாய்கள் என்பனவும் புனர்நிர் மாணம் செய்யப்பட்டுள்ளன. அதே சமயம் கே.கே.எஸ். வீதியின் அகலிப்புப் பணிகளும் துரித கதி யில் இடம்பெற்று வருகின்றன.(வி)

# வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் கிழக்கு மாலுசந்திப் பிள்ளையார் கோவில் வருடா ந்தப் பெருந்திருவிழா கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக் கிழமை தேர்த்திருவிழாவும், மறு நாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த் தோற்சவமும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தின மும் மாலை வாழ்வும் சமயமும்' எனும் தலைப்பில் அ.ஜெகதீஸ் வர தேசிகரின் சமயச் சொற் பொழிவு இடம்பெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (109)

# படை வீரர்களுக்கு புகழாரம் கிரிக்கெட் வீரருக்குப் பாராட்டு

(கொழும்பு)

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார அண்மையில் பிரிட்டனில் ஆற்றிய சொற்பொ ழிவிற்கு, பாதுகாப்புச் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ பாராட்டு வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளு க்கு எதிராக அரசாங்கப் படை யினர் நடாத்திய போராட்டத்தை குமார் சங்கக்கார பாராட்டியுள் ளதாக, கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போர் வெற்றி குறித்தோ அல்லது படைவீரர்கள் குறித்தோ சர்வதேச அரங்குகளில் எந்த வொரு விளையாட்டு வீரரும் சொற்பொழிவாற்றியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், குமார் சங்கக்கார படைவீரர்களின் ஆற்றலை பாராட்டி சொற்பொழிவு ஆற்றி தாக அவர் தெரிவித்துள்ளார்.

2011 கொலின் கௌட்ரி நினைவு சொற்பொழிவில் குமார் சங்கக்கார அண்மையில் உரையாற்றினார்.

இலங்கை கிரிக்கெட் துறை யில் இடம்பெற்றுவரும் ஊழல் மோசடிகள் தொடர்பிலும் குமார் சங்கக்கார கருத்து வெளியிட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்துக்கள் உள் நாட்டு வெளிநாட்டு ஊடகங் களில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியிருந்தது.

# புதிய மிருகக் காட்சிச்சாலை

(கொழும்பு)

வாகொல்ல புதிய மிருகக் காட்சிசாலையை விரைவில் திறந்து வைப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

பின்னவல யானைகள் சரணா ணலயத்திற்கு அருகில் அமைந்துள்ள வாகொல்ல மிரு கக்காட்சிசாலையின் நிர்மாணப் பணிகள் 80 வீதம் பூர்த்தியடைந் துள்ளதாக அதன் பணிப்பாளர் ஹாரா சேனாங்க குணரத்ன தெரிவிக்கிறார்.

இந்த மிருகக் காட்சி சாலை யில் நாட்டிற்கே உரித்தான மிரு கங்களும், அழிவடைந்து வரும் மிருகங்களுக்குமே மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் காணப்படும் இட வசதிகளை விட இங்கு அதிக ளவு வசதிகளை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பணிப்பா ளர் நாயகம் மேலும் குறிப்பிட் டார்.

இலங்கைக்கு உரித்தான சிறுத்தைப் புலிகளை பாதுகாப் பதற்காக சிறுத்தைப் புலிகளுக் கான பிரத்தியேக இடமொன்றை அமைக்கும் பணிகளும் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக ஹாரா சேனாங்க குணரத்ன மேலும் தெரிவித்தார்

# தமிழ் அகதிகள் விவகாரம் நியுசிலாந்தில் பெரும் சர்ச்சை




(கொழும்பு)

நியூசிலாந்து நோக்கிச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பலைவிட்டு வெளியேற மறுப்புத் தெரிவித்ததை அடுத்து மேற்படி விடயம் நியூசிலா ந்தில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. நியூ சிலாந்து நோக்கி அகதிகளாகச் சென்று கைது செய்யப்பட் டுள்ள இலங்கையர்கள் 85 பேரை விடுவிக்க இந்தோ னேசிய அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ள அதே வேளை அவர்களை ஏற்றுக்கொள்ள நியூசிலாந்து மறுப்புத் தெரி வித்துள்ளது.

85 இலங்கை அகதிகளை ஏற்றிய கப்பல் இந்தோனே சியாவின் பின்டன் தீவிலுள்ள தன்யுன்ங் பினெனங் நரகப் பகுதியிலுள்ள கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை நங்கூர மிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் உள்ள அக திகளை ரொய்டர் செய்திச் சேவையின் புகைப்படப் பிடிப் பாளர் யூலி செஜெரி நேரில் சென்று சந்தித்துள்ளார்.

தாங்கள் நியூசிலாந்து நோக் கிச் செல்ல விரும்புவதாகக் குறித்த கப்பலில் இருந்த அக திகள் குறிப்பிட்டுள்ளனர்.

கப்பலை விட்டு இறங்க இணக்கம் தெரிவிக்காத அகதிகள் ஐ.நா. தலையீட் டாலும் ஏனைய வழி முறை களிலும் நியூசிலாந்து செல்ல முடியுமா என ரொய்டர் செய் திச் சேவையின் புகைப் படப் பிடிப்பாளர் யூலி செஜெரிஸி டம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

"நாம் நியூசிலாந்து செல்ல வேண்டும்... தயவு செய்து எங் களுக்கு உதவி செய்யுங்கள்..." என இலங்கை அகதிகள் யூலி செஜெரிஸிடம் மன்றாடிக் கேட் டுள்ளனர்.

இரண்டு வருடங்களாக இந்த கப்பலில் இருக்கும் மற்று மொரு அகதி, இலங்கையில் தனது குடும்பம் கொலை செய் யப் பட்டுவிட்டதாகவும் அத னால் கப்பலைவிட்டு வெளியே வருவதைவிட கப்பலிலேயே உயிர்நீத்தல் சிறந்தது எனவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை அகதிகள் 85 பேரின் வழிமுறை களை தாம் ஏற்றுக்கொள்ள வில்லை எனத் தெரிவித்துள்ள நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ, அகதிகளை ஏற்றுக் கொள்ளத் தாயார் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகள் உண்ணா நோன்பு வவுனியா சிறையில் சாத்வீகப் போர்

வவுனியா சிறைச்சாலையில் நீண்டகாலமாகத் தடுத்துவைக் கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் 4 பேர் தங்களது விடுதலை தொடர்பில் துரித நடவடிக்கை யெடுக்குமாறு கோரி நேற்று திங்கட்கிழமை காலை முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைகள் துரிதப்படுத் தப்பட்டு தமது விடுதலை தொடர்பில் உரிய நடவடிக்கை யெடுக்கும் வரை தமது உண்ணா விரத போராட்டம் தொடரும் என வும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு

1. கட்டையல் லோகேஸ்வ ரன் (40 வயது), விலாசம், காந் திபுரம் செட்டிகுளம் வவுனியா. இவர் 01.07.2009 இல் இராணு வத்தினரிடம் சரணடைந்து புனர் வாழ்வளிக்கப்பட்டு பின்பு 15.01. 2010 இல் விடுதலை செய்யப்பட் டார் அதன்பின் 3 நாள் கழித்து 18.01.2010 இல் மீண்டும் வவுனியா வெலிக்குளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு தற்போது வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் 4 பிள்ளைகளின் தந்தையாவார்.

2. பொன்னம்பலம் சிவகுமார் (30 வயது), விலாசம், தம்ப னைக்குளம் முருங்கன். கைது செய்யப்பட்ட திகதி : 02.03.2007 இவர் 2 பிள்ளைகளின் தந்தை.

3. மரியதாஸ் மேர்வின் (25 வயது), விலாசம், 29/7இ புனித செபஸ்தியார் வீதி பாசையூர். கைது செய்யப்பட்ட திகதி: 17.10.2009.

4. ரங்கசாமி நந்தகுமார் (27 வயது), விலாசம், வேப்பவெட் டுவான் பன்குடாவெளி மட்டக் களப்பு, கைதுசெய்யப்பட்ட திகதி 20.09.2009. இவர் ஒரு குழந்தையின் தந்தை

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.